விபரம்
—
ண்டு ரூ 7,
380

# திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 9—10—49 இதழ் 15

## ★ நம் நாட்டுக் கொலு! ★



நவராத்திரி பண்டிகையின் போது, பொம்மைக்கொலு வைக்கிறார்களல்லவா, ராஜா ராணி, ராமன் ருஷ்ணன், மாடு குதிரை, முதலிய பலரகங்கள். இந்த விளையாட்டுக்கொலு கிடக்கட்டும். இன்று, நாட்டிலே ள்ள உண்மை நிலையைக் கொலுவாக்கிப் பார்த்தால், எப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள். த்திரம் அதுதான்.

14-ம் பக்கத்தொடர்ச்சி

திய பொருள்களை வரவழைக்க வேண்டிய அவசியம் இல்லாமையும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் கச்சாச்சணல், பருத்தி, தோல்கள் முதலான பொருள்கள் எப்போதும் விற்பனையாவதற்கு மார்க்கெட் இருப்பதாலும் தான். இந்தியா பிரிட்டனைப்போல அதற்கு டாலர் தேவையும் அதிகமில்லை. இந்நிலைமைகளை மனதில்வைத்து, மதிப்பீட்டை மாற்றாமலிருப்பது நன்மை பயக்கும் என்பதால் எல்லா நாடுகளையும் போல நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

ஆனால் பாகிஸ்தான் நாணய மதிப்பைக் குறைத்துக் கொள்ளாததால் அதிகப்பாதிக்கப்படும் நாடு இந்தியாதான். இந்தியா பாகிஸ்தானிலிருந்து வரவழைக்கும் பொருள்கள். கச்சாசணல், பருத்தி, அரிசி, தோல், பாறைஉப்பு, கடுகு முதலியவைகளாகும். இதில் கச்சாச்சணல், பருத்தி, அரிசி முதலியவை முக்கிய பொருள்களாகும். 1948-ல் மட்டும் பாகிஸ்தானிலிருந்து இந்தியா 65% கச்சாச்சணல், கிட்டத்தட்ட 146-கோடி ரூபாய்க்கு வரவழைத்திருக்கிறது. அந்த ஆண்டில் பாகிஸ்தானில் உற்பத்தியான கச்சாச்சணல் 54-லட்சம் பேல். இந்தியாவிலோ 21-லட்சம் பேல்தான்! சணல், வெளிநாடுகளுக்குத் தேவையான ஒரு பொருளாகும். இந்தியா கச்சாச்சணலை வாங்கி அதைக் கோணிப்பைகளாகவும், ஏனைய வகைகளிலும் செய்து, அமெரிக்கா முதலிய நாடுகளுக்கு அனுப்பி வருகிறது.

இப்போது பாகிஸ்தான், ஸ்டர்லிங் மதிப்போடு ரூபாய் மதிப்பைக் குறைத்துக்கொள்ளாததாலும், இந்தியா குறைத்துக்கொண்டிருப்பதிலும், இரண்டு நாடுகளுக்குமிடையேயுள்ள நாணய பரிவர்த்தனையில் மாறுதல் ஏற்பட்டுள்ளது.

முன்பு இந்திய ரூபாயும் பாகிஸ்தான் ரூபாயும் சமமாக இருந்தன. ஆனால் ஏற்பட்டுள்ள புது நிலைப்படி, இருநாடுகளுக்குமுள்ள நாணய மதிப்பு இப்படி மாறுகிறது:—

| இந்தியா | பாகிஸ்தான் |
|---|---|
| 1—0—0 | 1—7—4 |
| 100 | 144 |
| 69—5—0 | 100 |

முன்பு இந்தியாவிலிருந்து ரூ. 100 அனுப்பி பாகிஸ்தானிலிருந்து ஒரு பொருள் வரவழைக்கப்பட்டதென்றால், இப்போது அதே பொருளை வரவழைக்க இந்தியா ரூ 144 அனுப்பவேண்டும். அதே வேளையில், பாகிஸ்தான் 100-ரூபாய் மதிப்புடைய பொருளை முன்பு வாங்கவேண்டுமென்றால் 100 ரூ. அனுப்பவேண்டும், ஆனால் இப்போதோ ரூ 69—5—0 அனுப்பிவிட்டால், போதும்!

பாகிஸ்தான், ஸ்டர்லிங் மதிப்புக்கேற்பத்தன் நாணய மதிப்பைக் குறைத்துக் கொள்ளாததால் ஏற்பட்டுள்ள நிலை இது.

பாகிஸ்தானும், இந்தியாவும் பிரிவினை ஆகுமுன் ஒன்றாயிருந்த நாடுகள். எல்லாவற்றையும் ஒன்றாகவே அனுபவித்த நாடுகள். இருநாடுகளாகப்பிரிக்கப்பட்ட பின்னரும் பொருளாதார ரீதியில் இரு நாடுகளும் ஐக்கியமாகவே இருந்தன. வியாபாரமும், செலுத்தவேண்டிய பணங்களும் குறித்து இருநாடுகளும் செய்துகொண்ட உடன்பாடுகள் மூலம் இரு நாடுகள் நிலையும் இதுவரை தங்கு தடையின்றி ஒழுங்காகவே நடைபெற்று வந்தன.

ஆனால், இப்போதைய நிலையால் இரு நாடுகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள மாச்சரியமும், மன மாறுபாடும் மிகவும் பாதிக்கக் கூடியவை. பாகிஸ்தான் மேற்கொண்ட முடிவால் நஷ்டம் பாகிஸ்தானுக்கு ஏற்படாது! டாலர் சம்பாதித்துக் கொடுக்கக்கூடிய ஏற்றுமதிகளில் சணல் மட்டுமே 50% தந்துவிடும். ஆனால் இந்தியாவின் நிலையோ, பாகிஸ்தானிலிருந்து இன்றியமையாத கச்சாச் சணல் முதலானவைகளை இறக்குமதி செய்யவேண்டியதாகும்.

கச்சாச் சணலை இறக்குமதி செய்து, அவைகளைக் கோணிப்பைகளாக்கும் தொழிலில் மட்டும், இந்தியாவில மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். எனவே, இந்தியாவுக்கு வேண்டிய கச்சாச்சணலை பாகிஸ்தானிடமிருந்தே வரவழைக்க வேண்டும். ஆனால் பாகிஸ்தானுக்கு முன்னைவிட இப்போது அதிக பணம் கொடுத்தாக வேண்டும்.

இந்திய அரசாங்கத்தின் ஆய்ந்தோய்ந்து செய்யாத நடவடிக்கையின் விளைவு இது. தான்நடவடிக்கையெடுக்கு முன் இந்தியா, பாகிஸ்[தா]னைக் கலந்து பேசி, ஒரு சமரச மு[டி]வைக் கண்டிருக்கலாம்.

இங்கிலாந்து ஸ்டர்லிங் மதிப்பு குறைவுபற்றி நடவடிக்கை எடுக்[கு] முன் அமெரிக்கா, கானடா, காம[ன்]வெல்த் நாடுகள் ஆகியவைகளுட[ன்] கலந்துபேசியே, ஒரு முடிவுக்கு [வந்]திருக்கும்போது, பக்கத்திலிருக்கு[ம்] பாகிஸ்தானைக் கலந்துபேசி ஒ[ரு] கூட்டுமுடிவுக்குவர நேரமில்லா[ம]லில்லை, போதிய அவகாசமில்லா[ம]லில்லை! ஆனால், மாச்சரிய மனப்பா[ன்]மையும், அவசரமும் இந்[த] 'ஆபத்தை' பரிசாகத் தந்துள்ள[ன] இந்தியாவுக்கு!

பாகிஸ்தான் தன்முடிவைக்கூற[ம]சிலநாட்கள் ஆலோசனை செய்தது போல, இந்தியாவும் செய்திருக்[க]லாம். ஆனால் செய்யவில்லை. நினை[க்]கப்படவில்லை.

பாகிஸ்தான்— இந்தியாவிடையே நிலவும், வேற்றுமைப்பிரச்னைகளி[ல்] ஒன்றாக 'இதுவும்' சேர்ந்துவிட்டது பகைவளர வழி தந்துவிட்டது!

4-ம் பக்கத்தொடர்ச்சி

வெட்கப்படக்கூடியகாட்சி, விய[க்க] வேண்டிய நிலை! ஒரு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் அரசியல் காரியங்களுக்காக, சிறையில் பிடித்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்[ப]தற்காக, 'இவ்வளவு பேரை ஜெயிலில் வைத்திருக்கிறீர்களே! உங்கள் சாமர்த்தியமே, சாமர்த்தியம்' என்று தட்டிக் கொடுக்கும் புத்தி சாதாரணமாக, அடக்குமுறைக்ு[கு] ஆளான கட்சியின் எதிர்க்கட்சித் தோழர்களுக்குத் ஏற்படுவதுகூட கூடாது, ஆறிடு மேடும் மடுவும் போலாம் அரசியல் வாழ்வு என்பதால்!

அப்படியிருக்கும் போது, நாட்டின் மிகப் பெரிய கட்சி யென்[று] கூறப்படும் காங்கிரசினுடைய தலை[]வர் பாராட்டுகிறார், 'பலே, பேஷ்' என்கிறார், அதிகமான பேர் சிறையில அடைபட்டிருப்பதுகண்டு!

இந்த எண்ணம், சர்வாதிகார[ப்] பூந்தோட்டத்தில் தான் மலரும். இந்த நிலை, ஏற்படுவது, நல்லதல்ல, கொடுமை பயக்கும் என்பதை, சர்[க்]கார் உணராவிட்டாலும், சர்க்கார் ஆட்டிப்படைக்கும் தலைவர் உண[ர] வேண்டும், பாதை சரியாக இருக்[க] வேண்டும், எதிர்காலம்இடர்மிகா[மல்] அமையவேண்டும் என்பதால்!

# துணிகரமான துரோகம்!

நம் குற்றங்களை மறைக்க அவர் யரை உபயோகிக்கிறோம்'

நம்மிலேயே சிலர் சுயநலக்காரியங் நக்காக அவர் முறையைக் கைக் ாள்கிறோம்!'

இரண்டு ஆண்டுகளில் படிப்படி கத்தடுமாற்றப்பாதையில்விழுந்து டோம்.'

இந்த 'முகாரி' இந்திய துணைப் தமர், உள்நாட்டு மந்திரி, இரும்பு ிதர், சர்தார் பட்டேலினுடை . அக்டோபர் 2ல், காந்தியார் ந்த நாள் விழா, புது டெல்லியில் ண்டாடப்பட்டபொழுது அனுப் ள்ள செய்தியில் இந்த "கவலைத் ிகளை"த் தெளித்துள்ளார்!

அக்டோபர் 2, உத்தமர் காந்தியா பிறந்த நாள் விழா, நாடெங்கும் ண்டாடப்பட்டிருக்கிறது; உல ங்கும் அவர் புகழ் பாடப்பட்டி கிறது.

ாங்கிரஸ் மந்திரிகள், காந்தியாரின் சியம், அவரது ஆசைக் கனவு ஆகியவைகள்பற்றி முழக்கியுள் ர், நிர்மாணத்திட்டங்களை நிறை ற்றுவதே அவருக்கு நாம் செய் அஞ்சலி என்று அறை கூவியுள் ர்.

ந்த நேரத்தில்தான், இந்திய எஃகு மனிதர் என்று புகழப் பட்டேல், தனது கவலைத் களைச் சிந்தியுள்ளார், அதில் ளத்தில் எழும்பிக் கொந்தளிக் சோகத்தின் சாயல் பிரதிபலிக் து! துயர அலைகள் மிதக்கின்றன!

அவர் பெயரை சுயநலக்காரியத் க்காக உபயோகிக்கிறோம்.

நாம் பாதை தவறி விழுந்து ட்டோம்.

குற்றங்களை மறைக்க அவர் பயர் பயன்படுகிறது.

ண்மையான விளக்கங்கள், அது அன்று முதல் இன்றுவரை கிரஸ் வளர்ச்சியில் கண்ணுங் ந்துமாயிருந்து, பாடுபட்டுக் கொண்டிருக்கும் பட்டேலுடைய இதயத்திலிருந்து சிந்தியவை. வேதனை முத்தாக உதிர்ந்தவை!

* * *

காந்தியார் பெயர் இன்று காங்கிரஸ் 'கனம்'களுக்கும், 'தியாகி'களுக்கும், தங்கள் குறைகளை, சுயநலக் காரியங்களை மறைத்துக் கொள்ளும் போர்வையாகி விட்டது என்கிறார் பட்டேல். உண்மையும், நாட்டில் நிலவும் நிலைமையும், அவரது, சோகச் சொற்களில் பிரதிபலிக்கின்றன.

எதெற்கெடுத்தாலும் 'அண்ணல் ஆத்மா, வழிகாட்டுமாக!' "அவரது புகழுடல் நமக்கு புத்தி கூறுமாக!" என்றெல்லாம், காங்கிரஸ் ஆளவந்தார்கள், கூட்டத் துவக்கத்திலும் முடிவிலும், ஒரு குரல் உரத்து எழுப்புகிறார்களே யொழிய, மேடையினின்றும் கீழே இறங்கியதும், 'என்ன' 144ஐ மீறி பொதுக்கூட்டம் நடத்துகிறார்களா? விடாதீர்கள்! விரட்டுங்கள்! வீசுங்கள் தடிகளை. அதற்கும் கலையாவிட்டால், துப்பாக்கிப் பிரயோகம் செய்யுங்கள்! 'என்று உத்தரவிடும், மதோன்மத்த நிலையில்தான் இருக்கின்றனர்.

காந்தியார் மக்கள் நல்வாழ்வுக்கெனப்பாடுபட்டவர். அவரது கொள்கைகளில், பழமை, இருந்தாலும் அவரது இலட்சியம், மக்களுக்காக வாழவேண்டும், அவர்கள் நல்வாழ்வுக்காக உழைக்கவேண்டும், யாவரும் சரிநிகர் சமானமாக, சகோதரர்களாக வாழவேண்டும் என்பதுதான். தன்னலமற்ற போக்கும், தொண்டு புரிவதே பிறப்பின் பெருமை, என்று கருதியதனாலும், அவர் மறைந்தும், மக்கள் இதயங்களில் மங்கா விளக்காக ஆகிவிட்டார்!

அவரது காலத்தில், அவர் கூறியவைகளுக்கெல்லாம், அஞ்சலி செய்து, அவர்காட்டுவதே நன்மார்க்கம்; ஏனையதெல்லாம் துன்மார்க்கம் என்று கூறினர், காங்கிரஸ்காரர்கள்.

ஆனால், அவர் மறைந்து விட்டார், அவர் இனி நம் கண்ணில் தென்படமாட்டார், என்று ஏற்பட்டதும், அவரைப் போற்றிப் புகழ்ந்த கண்ணியர்களின் கவனம் எல்லாம் திசை மாறி விட்டது; பட்டேல் கூறுவது போலப் பாதை மாறி விட்டது; சுயநலம் சூழ்ந்து விட்டது!

அகிம்சை! அகிம்சை!! என அவர் கூறினார் 'ஆம் ஆம்' என்று தலையசைத்தனர், பஜனை பாடினர், அவரைப் பின் பற்றியவர்கள். ஆனால், இன்று 'அ' பறந்துவிட்டது, எங்கும் ஹிம்சை, ஹிம்சை என்று மக்களின் பரிதாபப் பாட்டுகள் எழுப்புகின்றன.

அவர் அன்புவழி காட்டினார்; அவரைப் பின் பற்றியவர்கள் அந்த வழி மறந்து அடக்குமுறைச் சாலையில் ஓடிக் கொண்டிருக்கின்றனர்! இன்னா செய்யாதே, எல்லோருக்கும் பாடுபடு என்றார், 'ஆகா' என்று அன்று தலையசைத்தவர்கள் 'எனக்காகவே பாடுபடுவேன்!' என்று கிளம்பி விட்டனர்!

காந்தியார் மறைந்து இரண்டு ஆண்டுகள் கூட இன்னும் முற்றுப் பெறவில்லை. இதற்குள் அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றியவர்கள், இன்னும் அவரது நாமத்தையேப் பஜிப்பவர்களின், போக்கு மாறிவிட்டது; நினைப்பில் சுயநலமும், நெஞ்சில் கொடுமையும், செயலில் இம்சையுமாகவே அவர்கள் பாதை அமைந்து விட்டது. இரண்டு ஆண்டுகள்! இதற்குள் நடைபெற்ற தடியடிகள், துப்பாக்கிப் பிரயோகங்கள், போடப்பட்ட தடையுத்தரவுகள், அடக்குமுறைக்கு ஆளாகி காலிழந்தோர், கண்ணிழந்தோர் உயிரிழந்தோர் தொகை, எண்ணற்றன! எடுத்து எழுதக்கூட முடியாத அளவில் 'கோர' உருவில் வளர்ந்து விட்டன!

ஆடம்பரம் கூடாதென்றார், அனாவசியச் செலவுகள் ஏனென்றார், சொந்தலாபங்களைக் கவனிக்காதீர்

(அடுத்த பக்கத்தில்)

# இப்படியும் ஒரு பாராட்டு!

பட்டாபி, பாராட்டுகிறார், சென்னை மாகாணத்தில்தான் இந்தியாவிலேயே அதிகமான கம்யூனிஸ்டுக் கைதிகள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர், என்பதற்காக.

பரிதாபம், ஏற்படுகிறது நமக்கு, காங்கிரஸ் தலைவர், கண்ணிய மிக்கவர், உரிமைக்காகப் பாடுபடுவதாக உரத்துக் கூச்சலிட்ட கட்சியின் தலைவராக இருந்தும், அவர் இதைக் கூறுகிறார் என்பதற்காக.

அக்டோபர் 2ந் தேதி நீதி—நிர்வாக இலாகா பிரிவினை நடவடிக்கையை மேற்கொண்டமைக்காகக் பாராட்டிச் சென்னை சர்க்காருக்கு அவர் அனுப்பியுள்ள பாராட்டுச் செய்தியில்தான் இங்ஙனம் குறிப்பிட்டுள்ளார்.

விவசாயக் கடன் நிவாரணம், மது விலக்கு, கோயில் நுழைவு, காங்கிரஸ் தேர்தல் எல்லாவற்றிலுமே சென்னை தான் முதலிடம் வகிக்கிறதென்று பெருமைப் பட்டுக்கொண்டு கூறுகிறார், கம்யூனிஸ்டுக் காவல் கைதிகளும் மிக மிகப் பெருத்த அளவில்—640—இங்குதான் இருக்றனர் என்பதாக!

காவல் கைதிகள் தொகை, அதிகமாகியிருப்பது, பெருமிதத்துக்குரிய விஷயமாகப்படுகிறது, பட்டாபிக்கு, இந்திய காங்கிரஸ் தலைவருக்கு!

அதிகமான பேர், சிறையில் காவலில் வைக்கப்பட்டிருப்பது, அக மகிழ்ச்சிக்கான விஷயமாகிவிட்டது—மக்களுக்காகப் பாடுபடுவதாகக்கூறிக் கொள்ளும் தலைவருக்கு.

விசித்திரமானது மட்டுமல்ல! வேதனையான நிலை, நாட்டு மக்களுக்கும், நாட்டு நாயகர்களாக விளங்கும் 'கனம்'களின் கட்சியான காங்கிரசுக்கும்.

'இம்' என்றால் சிறைவாசம் 'ஏன்' என்றால் வனவாசமா, எடுத்ததற்கெல்லாம் கைது செய்வதா, என்ன செய்து விட்டோம், ஏனிப்படி ஆடுகின்றீர்கள். அட்டகாசம் கொள்ளாதீர், அன்னியரே! ஆணவம் அழிந்துவிடும் இன்றில்லாவிட்டாலும் ஒரு நாள், என்றெல்லாம் முழக்கமிட்டவர்கள் தான் காங்கிரஸ்காரர்கள்.

தங்கள் இலட்சியப்பாதையில் நடந்துகொண்டு வந்தபோது காங்கிரஸ்காரர்கள், ஈடுபட்ட செயல்களும், அதை அடக்க அன்னிய ஆதிபத்தியம், அடக்குமுறை வீச்சுகளை வீசியதும், அப்போதெல்லாம் அவர்களும் அவர்களைச் சார்ந்தோரும் எழுப்பிய கண்டனக் கூச்சல்களும், கிளர்ச்சிப் புயல்களும் எண்ணற்றவை.

நேரு சிறையில் மண்வெட்டி எடுத்து வெட்டுவதைப் படம் போட்டு, 'பாருங்கள் ஏகாதிபத்தியத்துக்கு, குழி தோண்டுகிறார்' என்று ஒரு நாளும், 'ஐயோ! அவர் எடை எவ்வளவு குறைந்துவிட்டது' என்று இன்னொரு நாளும், அப்போதைய 'ஆண்டவர்களின்' அடக்குமுறைப் போக்கைக் கண்டித்தனர், காங்கிரஸ் தலைவர்கள்—பிரமுகர்கள். பாதுகாப்புச் சட்டத்தை, ஆட்சொல்லிச் சட்டம் என்றழைத்தனர்!

காவலில் வைப்பது, காட்டுமிராண்டித் தனமானது, அடக்குமுறைத் தர்பாரின் உச்சகட்டம் என்றெல்லாம் கண்டித்தனர்!

அடக்குமுறை அட்டகாசங்களை, எதிர்த்து, சரிசமமாக நின்று, 'சவால்' விடுத்து, சர்க்கார் கைதுப் படலம் என்றால், 'ஆகஸ்டுப் படலம்' செய்து, 'தியாகி'களும் ஆயினர்.

அன்று, கண்டித்தனர், காரசாரமாக எதிர்த்தனர், ஆங்கில ஆட்சியின் அடக்குமுறைகளை. இன்று, அன்று எதிர்த்துக் கர்ஜனை புரிந்த அதே வாய், புன்னகை புரிகிறது, பாராட்டுகிறது, தட்டிக் கொடுக்கிறது, 'சபாஷ்' என்கிறது! ஒரு நாட்டிலுள்ள மக்களில் சிலர் சிறையில் பிடித்துவைக்கப்பட்டிருக்கிறார்கள் ஏதோ காரணத்துக்காக, என்பதற்காக மகிழ்கிறது, அந்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டதாக, பாடுபடுவதாகப் பறையடிக்கும் ஒரு கட்சி!

(2-ம் பக்கம் பார்க்க)

(முன் பக்கத் தொடர்ச்சி)

களென்றார், சொகுசு வாழ்
எண்ணாதீர்களென்றார், மக்
வாழ்வை நினையுங்களென்
அவர் இருந்த போது!

அத்தனை உபதேசங்களை
அவரது வழிப்படி நடப்
கூறும் காங்கிரஸ் கனவான்கள்
றில் பறக்கவிட்டு விட்டனர்!

கொள்ளைலாபம், கள்ளமார்க்
வியாபாரம், சுரண்டும் பு
சொகுசு வாழ்வு, சொந்த
பராமரிப்பு அத்தனையும்
போல நீண்டு வருகிறது, இன்

அன்னிய நாட்டுக்கு அ
தூதுவர்கள் என்ற பெயரில்
சோபலட்சம் ரூபாய்கள், கவு
மதிப்பு என்ற வார்த்தை
சொல்லிவிரயமாக்கப் படுகின்ற

வேண்டியவர்கள், சொந்தக்
கள் ஆகியவர்களின் சுகங்க
பேணுவதே தங்கள் இல
மெனக்கொண்டு விட்டனர்,
யாரின் சீடர்கள்!

உலகசமாதானம் என்று
யார் எப்போதும் கூறிவந்
அகிம்சா மார்க்கமே அனைத்
நல்லது என்று தினம், தினம்
வந்தார்.

ஆனால், ஆளவந்தோர், இன்
உலகப் போர்ப்பாதையில் உரு
போய் விழுந்துகொண்டிருக்கி
னர்.

அவர், தம்வாழ்நாளில் கூ
அனந்தம். அவைகள் தான் "
மந்திரம்" எனச்சொல்லிப் பூரித்
போனவர்கள் தான், இன்று
ளும் நாயகர்கள்.

அவர் கனவுகண்ட இலட்
கள், காற்றுக் கோட்டைகளாகி
டன. அவர் காட்டிய பாதை
முரண்பட்ட பாதையில்
கொண்டிருக்கின்றனர். அவர்
னென்ன கூடாது, கேடு பய
நினைக்கவும் தீது என்றாரோ,
களையே இன்று தங்கள் நி
நிகழ்ச்சிகளாக்கி வருகின்றனர்
கிரஸ் 'கண்ணியர்கள்'

இருந்தும், இன்னும் அவர்
ரைச் சொல்கின்றனர். 'அவ
ஆத்மா சாந்தியடைய இவை
செய்கிறோம்' என்கிறார்கள். வி
யான காட்சி! துணிகரம்
துரோகம்!!

# முன்னணிப் படையினர் நாம்

## முன்னேறிச் செல்வோம், வாரீர்!

அப்பாவிகள்!
ஆட்டுமந்தைகள்!
மயங்கிவிட்டவர்கள்!
பாதை தவறியவர்கள்!
பகுத்தறிவற்றவர்கள்!
ஏமாந்துபோனவர்கள்!

ன்றெல்லாம், தூற்றப்படுகிறீர்கள்—என்னுடன் கூடிக்
ாண்டீர்கள்—தனிவழி செல்லத் துணிந்தீர்கள்—
லவரின் சொல்லால் வேதனையும் செயலால் வெட்க
ம் அடைய நேரிட்டதை வெளியே கூற முன்வந்தீர்
— அவருடைய தலைமையின் கீழிருந்து பணிபுரிய
த்துவிட்டீர்கள்—திராவிட முன்னேற்றக் கழகம்
ண முன் வந்தீர்கள்—என்ற காரணங்களுக்காக.

எந்தத் தலைவரால் வீரர் என்றும், தீரர் என்றும்
ாகி என்றும் விவேகி என்றும் பாராட்டப்பட்டு வந்
களோ, அதே தலைவர், இப்போது, அப்பாவி என்
ம் ஆட்டுமந்தை என்றும், ஏமாளி என்றும் இடறி
ழுந்தவரென்றும் தூற்றுகிறார். இதனால் கோபமும்
ாகமும் உங்களுக்கெல்லாம் ஏற்பட்டிருக்கக்கூடும்—
துதல் கூறவேண்டிய கடமை எனக்கிருப்
த உணர்கிறேன். எனவேதான், என் மனதில் அலை
ாதிக்கொண்டிருக்கும் எண்ணங்களை இம்மடலில்
ித்தனுப்புகிறேன்.

உங்கள் மனம் புண்படும்படி, பெரியாரும் அவர்
ளிருப்போரும், 'வசை' பாடுகின்றனர்—என்னுடன்
கள் சேர்ந்திருக்கிறீர்கள் என்று குற்றம் சாட்டி.
ந்துகிறேன். உண்மைக்கு ஊறும், நேர்மைக்கு
ருக்கடியும், சிற்சிலசமயங்களிலே ஏற்படுவதும், தூய
இகழப்பட்டு, அறம் பழிக்கப்பட்டு, அவதூறு
ப்பப்படுவதும், இந்த விசித்திர உலகிலே, நேரிடும்
ீதச் செயல்களிலே சில. அம்முறையில், இப்போது
கள் தூற்றப்பட்டு வருகிறீர்கள்—இழித்தும் பழித்
ம் பேசுகிறார் பெரியார்—மனம் வேதனைதான் அடை
. இப்படிப்பட்ட சமயத்திலேதான், உள்ளத்தில்
கமான உறுதி இருக்கவேண்டும்—சகிப்புத்தன்மை
ப வேண்டும்—பதறும் போக்கு அறவே மறைய
ண்டும்—அலையைக் கண்டு அஞ்சாது செல்லும் கல
ன, தூற்றலைப் பொருட்படுத்தாது, நாம்மேற்கொண்
ள பணியில் ஈடுபடும் பண்பு வளரவேண்டும். அப்
ிகளென்றும் ஆட்டுமந்தைகளென்றும் அவர் ஏசு
ர்—பொருளற்ற சொற்களென்று தள்ளிவிடுங்கள்,
வைகளை—அவர் அடைந்த ஏமாற்றத்தின் விளைவு,
த ஏசலுரைகள் என்பதை அறிந்துகொள்ளுங்கள்
ிகைக்கிறார், எனவே தூற்றுகிறார், என்பதைத்
ிந்துகொள்ளுங்கள். இதை உணர்ந்தால், நிச்சயமா
சொல்கிறேன், அவர் தூற்றும்போதெல்லாம்,
பம் வராது, சிரிக்கத்தான் தோன்றும். நான் அப்
படித்தான், சிரிக்கிறேன். 'உனக்குச் சரி, உன்னையா அவர், அப்பாவியென்றும் ஆட்டுமந்தையென்றும் தூற்றினார், கொள்கைக்காகப் பாடுபடும் பண்பினராகிய எங்களையல்லவா, ஏசுகிறார்' என்று கேட்கத் தோன்றும். நண்பர்களே! நானும் அவருடைய ஏசலுக்கும் கண்டனத்துக்கும் இலக்காகித்தான் இருக்கிறேன்—உங்கள் மீது வீசப்பட்ட கண்டனச் சொற்களை விடக் கடுமையான சொற்களை வீசி வருகிறார், என்மீதும், என்னுடன் கூடிப் பணிபுரியும் தோழர்கள் மீதும்.

துரோகிகள்!
ஜாடாசுகள்!
தேவதத்தர்கள்!
பொதுவாழ்வினால் பிழைப்புத் தேடுவோர்!
வயிறு வளர்ப்போர்!
சுயநலமிகள்!
எத்தர்கள்

இப்படி, 'அர்ச்சனைகள்' அனந்தம், நித்தநித்தம். அது மட்டுமா? பழங்காலத்துத் தவசிகள், 'சாபம்' கொடுப்பார்கள் என்று கதை கூறுவார்களே, அதுபோல, பகுத்தறிவுத் தந்தை, பலப்பல சாபமிடுகிறார்!!

விரட்டப்படுவார்கள்!
விரண்டோடுவார்கள்!
மறைந்துபோவார்கள்!
வேறுகட்சியில் சேர்வார்கள்!
தேர்தலுக்கு நிற்பார்கள்!
தேய்ந்துபோவார்கள்

என்றெல்லாம், 'சாபம்' இடுகிறார்.

இந்த 'ஏசல்', 'சாபம்' இவைகளை, நான், அவர் அடைந்துள்ள ஏமாற்றத்தின் விளைவு என்று நன்றாக அறிவதால், எனக்குக் கோபம் அல்ல, சிரிப்புத்தான் வருகிறது.

அவருக்கு நிச்சயமாக 'ஏமாற்றம்'தான் இது. அவருடைய, பொதுவாழ்வில், பலமுறை பலருடைய எதிர்ப்பைக் கண்டு முறியடித்திருக்கிறார்—அப்படிப்பட்ட எதிர்ப்புகளிலே இதுவும் ஒன்று என்றுதான், அவர் எண்ணினார்—இது அந்த வகையைச் சார்ந்ததல்ல—எதிர்ப்பும் அல்ல—வேதனைப்பட்ட உள்ளத்தினர் வேறுவழிதேடும் முயற்சி இது, என்பதை உணர்கிறார், உணரும்போது, அவருடைய உள்ளத்திலே ஆத்திரம் பொங்கி, அப்பாவி என்று உங்களையும், துரோகி என்று என்னையும் தூற்றினால்தான், நிம்மதி கிடைக்கும் என்று எண்ணுகிறார்—தூற்றுகிறார்.

நாட்டுக்கு நல்லுரையும், அறவுரையும் கூறவேண்டியவர், பகுத்தறிவைப் பாராட்டவேண்டியவர், சமுதாய இழிவுகளை எதிர்த்துப் போரிட வேண்டியவர், நம்மை நிந்திக்கும் காரியத்திலா ஈடுபடவேண்டும்—கோட்டை கொத்தளங்களை இடித்துத் தள்ளவேண்டியவர், ஓலைக் குடிசை எதிரே ஓங்காரக் கூச்சலிட்டுக்

# வேதனையால் வேறுவழி காணும் முயற்...

கொண்டிருப்பது போல, சிங்கம் சிற்றெலிகள் மீது பாய்வதுபோல எவ்வளவு மகத்தான காரியங்களைச் சாதிக்க வேண்டியவர், கண்ணீர் சிந்திடும், இந்தத் 'துர்ப்பாக்கியர்கள்' மீது, தூற்றல் பாணத்தைத் தொடுத்திடும் காரியத்திலா ஈடுபட வேண்டும்—அந்தோ! ஏன் இந்த வீழ்ச்சி, என்று எண்ணித்தான், நான் ஏக்கமடைகிறேன். நீங்களும் நிலைமையைச் சற்று ஆராய்ந்து பார்த்தீர்களானால், இதே முடிவுக்கு வருவீர்கள்.

உங்கள் உள்ளத்தில் உறுதியும், ஆராயும் திறனும் தழைத்திருக்கிறது—ஆகவேதான் அவர் அப்பாவி என்று தூற்றினதைப் பொருட்படுத்தாமல் — ஆக்க வேலையில் ஊக்கம் காட்டி வருகிறீர்கள். மகிழ்கிறேன், நண்பர்களே! நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்! உங்கள் பண்பு கண்டு பாராட்டுகிறேன்!!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைகள், பலப்பல தோன்றிவிட்டன — முறைப்படி — ஆர்வத்துடன்.

திராவிடர் கழகக் கிளைகள் கூடிப் பெயர் மாற்றுவது —திராவிடர் கழகக் கிளை கூடி, அதனைக் கலைத்துவிட்டு, புதிய அமைப்பு ஏற்படுத்துவது—திராவிடத் தோழர்கள் கூடி, புது அமைப்புத் துவக்குவது, என்று மூன்றுவகைத் திட்டங்களைக் கையாண்டு, திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளை ஆங்காங்கு அமைத்திருக்கிறீர்கள்:

திராவிடர் கழகக்கிளை ஒன்றுகூடி, பெயரை மாற்றுவது, அல்லது, கலைத்துவிடுவது, என்று விவாதித்து, பெருவாரியானவர்கள், அங்ஙனம்செய்தல்கூடாது, திராவிடர் கழகம் என்றுதான் இருந்தாக வேண்டும் என்று தீர்மானித்துவிட்டனர், என்று செய்தி, எங்கும் இல்லை—மூன்று முறைகளிலே, ஏதேனும் ஓர் முறையில், திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்ட செய்திதான், வந்து கொண்டிருக்கிறது. நேர்மைக்கு இதைவிடச் சிறந்த வெற்றி வேறு என்ன வேண்டும்? ஆயிரம் கண்டனச் சொற்கள் நம்மீது அவர் வீசினாலும், என்ன செய்யும்? இந்த வெற்றிச் சேதி நமது மனப் புண்ணை விரைவிலே மாற்றிவிடக் கூடியதல்லவா? இந்த 'வெற்றிச் சேதி'யைக் காணக்காண, அவருடைய ஏசலும் தூற்றலும், அதிகரித்த வண்ணம் தான் இருக்கும், அன்பர்களே! வருந்தாதீர்கள், கடமையைச் செய்யும் போது கஷ்டம் ஏற்படுவது சகஜந்தானே— ரோஜா பறிக்கும் போதுகூட முள் தைக்கிறதே— தூய்மையான உள்ளத்தினர் தொடங்கும் நற்காரியத்துக்கு, துவக்கத்திலே, தூற்றல்தான் பரிசாகக் கிடைக்கும் — பொறுத்துக் கொள்வோம்.

அப்பாவி என்று உங்களையும், துரோகி என்று என்னையும் இப்போது அவர் தூற்றுகிறார், 'ரத்தினங்கள்' என்று உங்களையும், "பெட்டிச் சாவியைத் தருகிறேன்' என்று என்னைக் குறித்தும், புகழ்ந்திருக்கிறார். ஆயிரம் மேடைகளிலே கூறியிருக்கிறார், "எம். ஏ. படித்துவிட்டு இந்த அண்ணாத்துரை என்னோடு சுற்றுவதற்குப் பதிலாக, காங்கிரசில் இருந்தால், இன்னேரம் ஒரு மந்திரியாகி இருக்கமாட்டாரா? என்ன இலாபம் என்னோடு இருப்பதால்?" என்று! "ஊராரின் தூற்... யும் உற்றார் உறவினரின் விரோதத்தையும் ஏற்... கொண்டு என்னைப் பின்பற்றும் தோழர்கள்" என்... உங்களை எல்லாம் பாராட்டியிருக்கிறார், பன்மு... இப்போது நீங்களும் நானும், 'தலையாட்டிகளாக' ம... கிறோம், கோபத்தால், ஏதேதோ கூறுகிறார்; நஷ்... என்ன நமக்கு அதனால்! • அவருடைய பாராட்... நிரம்பப் பெற்றிருக்கிறோம்—அதை எண்ணி ஆறு... பெறுவோம்.

துரோகி—ஜூடாஸ் என்றெல்லாம், என்னை... தூற்றி வருகிறார்கள் சரிதத் துண்டுகளைக்... காட்டுகிறார்கள்—இதனால் என்ன இலாபமோ அ... களுக்கு எனக்குத் தெரியவில்லை —எனக்கு ஒரு ந... மும் இதனால் ஏற்படப் போவதில்லை என்பது உ... இன்று இவர்கள் என்னைத் 'துரோகி' என்று தூற்... னால், நான் விரண்டுவிடவோ, அல்லது பொதும... என்னை வெறுத்துவிடவோமுடியுமா? இவருடன், ... மண சம்பந்தமாக மாறுபாடுகொண்டதற்காகத் தூற்... படுகிறேன்—தூற்றலைக்கண்டு, என் உளமார நான் ... வதைத் தள்ளிவிடவா முடியும்! அப்படி நான் அவ... தயாரிக்கப்பட்டவனல்லவே! அவருக்கே அது நன்று... தெரிந்திருக்கவேண்டுமே! திகைத்திருக்கிறார், என... தான் அதனை மறந்துவிட்டிருக்கிறார்.

மதத்துரோகி
தேசத்துரோகி
பிரம்மத்துவேஷி

என்று அவர், நாட்டிலே 'பெரிய'கட்சியால், 'பாம... பண்டிதர்' ஆகியோர் அனைவரிலும் பெரும்பான்மை... ரால், தூற்றப்பட்டபோதுதான், நான் அவருடை... 'பணியாள்' ஆனேன், படித்துப்பட்டம் பெற்ற நிலை...

அவர், பலவிதத்தில் 'துரோகி' என்று, தூற்... பட்டதுகேட்டு, நான் அப்படிப்பட்டவருடன் கூடி... பணிபுரிவது என்று கலங்கினதில்லை, அந்தத் தூ... விலே 'பங்கு' பெறுவதை என் 'பாக்கியம்' என்று க... னேன். ஏதோ என்னைத் தூக்கிவிட்டதாக—செல்வாக்... தந்துவிட்டதாக—இன்று பேசிக் கைபிசைந்து கொ... கிறார்களாம், 'ஆதரவாளர்கள்'—இனி யாரையும் அ... கள் தூக்கிவிடாமல் இருந்துகொள்ளட்டும் — ஆ... ஒன்றை அவர்களும் அறியட்டும்—பெரியாருடன் கூ... பணிபுரிந்ததால், கழகத்தோழர்களிடையே, அன்பு... ஆதரவும் கிடைத்ததுமட்டுமல்ல நான் கண்டது, அ... அளவுக்கு, கழகத்தவரல்லாத மற்றவர்களின் தூற்... யும் — சாபத்தையும்—எதிர்ப்பையும்—ஏளனத்தை... —பெற்றுக்கொண்டுதான் வந்தேன். மற்றக்கட்சிப் பே... சாளரோ, எழுத்தாளரோ, பெரியாருக்கு 'துரோகி... பட்டம் கொடுத்தால், எனக்கும் அதையேதான்கொடு... தனர். அவருடன் சேர்ந்து, மற்றக்கட்சியினரின் 'து... றலைப்' பெற்றுவந்தேன்— இப்போது அது போ... தென்று, கழகத்தோழர்களிலேயே சிலரும் என்னை... தூற்றுகின்றனர்—இவ்வளவுதான்! பெரியாருடன்கூடி... பணிபுரிந்தபோது, மற்றக்கட்சியினர் தூற்றினபோ... சகித்துக்கொள்ளமுடிந்ததே, அந்தப்பண்பு எனக்கு...

(10-ம் பக்கம் பார்க்க)

## பொட்டிட்டார்!

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

ராமபக்தி பற்றிக் கவர்னர் ஜென
இப்படிப் பஜனைபாடினார்-இடம்,
ம், எதற்கும் கட்டுப்படமறுத்து
டார். அவர் தங்கியுள்ள அரண்
மை ஆசிரமமென எண்ணிக்
ண்டு, தம்மை வால்மீகியாக்கிக்
ண்டு, ராமபக்தி பாடினார். ஒரு
ம், சம்பந்தி காந்தியாரின் 'ராம
ா' முறையைக் கையாளும்
மையைத் தாம் பெறவேண்டும்
ு எண்ணம் போலும். எண்ணம்
வாகவோ இருக்கட்டும். இவர்
டி டில்லியில் ராமபக்தியைப்
ப் பேசிக்கொண்டிருக்கும் சம
லே ஆக்ரா நகரிலே ஒருஆசாமி
சக்தி'யைச் சோதிக்க எண்
ா என்னவோ, ஒரு காரியம்
திருக்கிறான்.

லவேளை, அவன் செய்த காரி
ஆச்சாரியார் காதில் அந்தச் சம
விழவில்லை, விழுந்திருந்தால்,
பதைப்பாக மாறிப்போயிருக்

மலீலா திருவிழாவுக்காக ஆக்ரா
ள்கூடினர் ஆலயத்தில் -ராவண
காணோம்! ஆலயத்திலேஇருந்த
த்தை, எவனோ களவாடிக்
டு போய்விட்டான்.

த ஆசாமி ஒருவேளை 'ராம
யைச் சோதித்தான் போலும்!
ண்டார்கள்!!

லியில், கவர்னர் ஜெனரல்
க்தி' பஜனை நடத்துகிறார்.

ராவில், யாரோ ஒருவன்
சிலையைக் களவாடிக்கொண்டு
றான்.

சமயம், ராமலீலா என்ற
கூறிக்கொண்டு, பொம்மை
ட்டு நடத்துவதைக் கண்டு,
டா இவர்கள் இப்படி ஒரு
பிள்ளை விளையாட்டில் ஈடுபடு
ள, இதைத் தடுக்க வேண்
வண விக்ரஹம் இருந்தால்
ராவண சம்ஹாரம் என்று
சய்வார்கள், ராவணனையே
ப்படுத்தி விட்டால், ராம்
தி, என்று எண்ணி, ராவண
த்தைக் களவாடிச் சென்
பாலும். ராம பக்தர்களின்,
னத்திலே ராமன் தோன்றி,
ன், ராவண விக்ரஹத்தைக்

களவாடிச் சென்றனர் என்பதைக் கூறி ராம் லீலா, சரிவர நடைபெறச் செய்திருக்கக் கூடாதா!

ராவண விக்ரஹம், மட்டுமா, ராம விக்ரஹங்களே, சில இடங்களிலே களவாடப்பட்டுப் போகின்றன! கண்டறிவார் இல்லை.

ராமன்—கிருஷ்ணன்—முருகன்—நடராஜா, போன்ற மூல தெய்வ விக்ரஹங்கள், பாரிஸ் நகருக்கு அடிக்கடி பயணமாகி விடுகின்றன கள்ளன் செய்யும் கைங்கரியத்தின் பலனுக. ஒரு கள்ளனாவது கண்குருடாகியோ, கைகால் ஒடிந்தோ, களவாடும்போது பக்தர்களிடம் சிக்கிக்கொண்டதில்லை. தேவாலயங்களிலிருந்து விக்ரஹங்கள் பல முறை களவாடப்பட்டு, பாரிஸ் ரசிகர்களுக்கு, விலைக்கு விற்கப்படுகின்றன என்ற செய்தி அடிக்கடி வெளிவந்த வண்ணம் இருக்கிறது.

"ஏ! பக்தா! என்னை ஒரு தூர்த்தன் களவாடிக் கொண்டுபோய், ஊருக்கு மேற்கே உள்ள மாந்தோப்பில், ஒரு பாழும் கிணற்றிலே புதைத்துவிட்டிருக்கிறான்." என்று யாரேனும் ஒரு பக்தரின் 'சொப்பனத்திலே' கோதண்டபாணி தோன்றிக் கூறுவார் - சென்று விக்ரஹத்தை எடுத்துவருவர், திருவிழா நடத்துவர்; ஒரு இருபதாண்டுகளுக்குமுன்பு இவ்விதம் 'செய்தி'கள் கிடைக்கும்.

இதற்கும் முன்பு — அதாவது ஐம்பது நூறு வருஷங்களுக்கு முன்பு, ',ஒரு கயவன் ராமவிக்ரஹத்தைக் களவாடத் துணிந்து, கோயிலுக்குள் சென்றான். விக்ரஹத்தைத் தூக்கினான், உடனே அவன் முதுகிலே, ஒரு பலமான அறை விழுந்தது — அவன் ஐயோ! என்று அலறிக் கீழே வீழ்ந்தான் — உடனே சீதாராம்—சீதாராம்—என்றுபஜனை செய்யும் சத்தம் கேட்டது—கள்ளன், பார்த்தான், ராம விக்ரஹத்துக்கு எதிரே தன்னைமறந்து ஆனந்தமாகக் குதித்தபடி, கைத்தாளமிட்டபடி, சீதாராம் சீதாராம்என்று பஜனை செய்து கொண்டு அனுமார் இருக்கக் கண்டான்—அந்த விநாடியே அவனுடைய அஞ்ஞானம் நீங்கிற்று—அதே இடத்திலே அவன், 'அனுமத் பிரபாவம்' எனும் அரிய காவியத்தை இயற்றினான்—அது தான் இது—என்று கூறி, ஒரு பழைய சுவடியைக் காட்டியிருப்பர்.

இப்போது வருகிற செய்தியோ, புலன் விசாரித்து வருகின்றனர் என்பது.

இப்படிக் காலம் மாறி இருக்கும் நிலையையும் மறந்து, கவர்னர் ஜெனரல், ராமபக்தி பஜனை செய்கிறார்!!

விந்தையான உலகம்! விசித்திர சித்தர்கள் நிரம்பிய உலகம்!!

—✻ –

## சென்னை

சென்னை நகரம் தமிழர்களுக்கே என்பது, மறுக்கமுடியாததாகி விட்டது.

'மதராஸ் மனதே' என்று கூறிக்கொண்டிருக்கும் வரையில், ஆந்திரர்கள் தனி மாகாணம் பெறப் போவதில்லை, என்பதை அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியினர், சின்னாட்களுக்கு முன்பு, தெளிவு படுத்தி விட்டனர்.

எனவே, இனியேனும் ஆந்திர நண்பர்கள், சென்னைமீது கொண்டுள்ள மோகத்தை மறந்து, வீண் பூசலும் கசப்பும் வளராத முறையில், ஆந்திர மாகாண அமைப்புக்கான ஆக்க வேலையில் ஈடுபடட்டும்.

9-ம் பக்கத் தொடர்ச்சி

பது தெரிந்ததால், காங்கிரசை விட்டு விலகி, தீவிர ஜனநாயக் கட்சியில் பணியாற்றி, அதன் காரணமாகவே, புதிய தேசபக்தர்களால், இருட்டடிப்புச் செய்யப்பட்டு, அது பற்றிக் கவலையற்றுக் கடமையைச் செய்து வந்தவர்.

பேச்சுரிமை, எழுத்துரிமை ஆகியவற்றுக்காக, விசாரணையின்றிச்சிறை வைத்தல் போன்றவைகளைக் கண்டிப்பதற்காக, பாரிஸ்டர், உயர் நீதி மன்றத்தில், போரிடும் பண்பினர். தமது 50ம் வயதில், பாரிஸ்டர் பிள்ளை, அக்டோபர் ஆறும் தேதி மறைந்தார் என்ற செய்தி கேட்டு, மிக மிக வருந்துகிறோம். உரிமைக் கிளர்ச்சித் துறைக்கே, அவருடைய மறைவு பெரு நஷ்டம். நமது ஆழ்ந்த அனுதாபத்தை, பாரிஸ்டரின் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். ✻

திராவிட நாடு
ஞாயிறு] 9—10—49 [காஞ்சி

# வாழ்க! புதிய சீனு

ஐந்து பொன்னிற நட்சத்திரங்கள் பொறிக்கப்பட்டுள்ள செங்கொடியை இலட்சக்கணக்கான சீனமக்களின் கண்ணும் கருத்தும் மலரும் வண்ணம், பறக்கவிட்டு, பிபிங் நகரிலே, மாசேதுங், மக்களாட்சியைத் துவக்கினர்—பிபிங்கி திருவிழா — விடுபட்டோம் புது வாழ்வு பெற்றோம் என்று மக்கள் கொண்டாடினர் — ஷாங்காய் நகரிலே கொடிஏற்றிக் கொண்டாட்டம் நடத்தினர்—பர்மாவிலுள்ள சீனர்கள்கூடத் தங்கள் குதூகலத்தைத் தெரிவித்துக் கொண்டனர்—புதிய சீனு உருவாகிவிட்டது—பொதுஉடைமைக் கட்சியினர் களத்திலே காட்டிய திறமையைக் காட்டிலும் அதிகமான ஆற்றலுடன் மக்களாட்சி நடத்துவர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது, புதிய குடிஅரசு அமைக்கப்பட்டு விட்டது.

ஆசிய வரலாற்றிலே, அதி அற்புதமான வெற்றி, சீன மாவீரன் மாசேதுங் பெற்றிருப்பது.

ஒரு நாட்டு விடுதலைப் போரில் வெற்றி பெற்றவர்கள், வீரப்போர் புரிந்து வெற்றிபெற்ற மாவீரர்கள், பலர் உண்டு உலக வரலாற்றில்.

கொடுங்கோலனை எதிர்த்துப் போரிட்டு, புது ஆட்சி ஏற்படுத்திய புரட்சி வீரர்கள் பலர் உண்டு.

மாசேதுங்கின் வெற்றி இவைகளைவிட முக்கியமானது — தனியானது—உலக வரலாற்றிலேயே, அவருடைய வெற்றி ஒரு புதிய அத்யாயத்தைத் தீட்டுவதாக அமைந்திருக்கிறது. வெளிநாட்டின் பிடியை முறியடிக்கப், போரிடும் போது கோழையும் வீரனுகி நிற்கும் காட்சியைக் காணமுடியும். கொடுங்கோலனை வீழ்த்துவதற்காக நடத்தப்படும் புரட்சியின் போது, ஏழை எரிமலையாகிடும் காட்சியைக் காணமுடியும். வீரம், மனஎழுச்சி, நிரம்ப இருக்கும், இவ்விரு சம்பவங்களின் போதும். ஆனல் மாசேதுங் மேற்கொண்ட பணி, இவைகளைவிட மகத்தானது. உலக வரலாற்றிலே உன்னதமான தனித் தன்மை வாய்ந்தது—தேசியத் தலைவனை, தேசபக்தி எனும் பாசத்தால் கட்டுண்ட மக்களைக் கொண்டு கட்டப்பட்ட பாசறைக் காவலனை, எதிர்த்துப் போரிட்டு, வெற்றி கண்டு, மக்களாட்சியை அமைத்தான், மாவீரன் மாசேதுங்.

தேசபக்திக்கு ஈடான சக்தி வேறு இல்லை — எப்படிப்பட்ட கொடுமையையும் தாங்கிக்கொள்ளும் மனஉறுதியை மக்களுக்குத் தரக்கூடிய சக்தி — சிறைச்சாலை, தூக்குமேடை, கண்காணுத் தீவிலே வாசம் எனும் எவ்வளவு கொடிய தண்டனையையும், புன்சிரிப்புடன் ஏற்றுக்கொள்ளும் உறுதியைத் தரக்கூடிய சக்தி—சூருவளிப்படைகளைக் கண்டு அஞ்சாத வீரமும், கொடுங்கோலரைக் கண்டு கலங்காத தீரமும் தரவல்ல சக்தி, தேசபக்தி.

இந்தத் தேசபக்தியைத் தூண்டிவிட்டு, தர்பார் நடத்திய தலைவனை —தேசபக்தியின் பெயர் கூறிக்கொண்டு ஆட்சிப் பீடம் ஏறி, தேசபக்தியின் பெயர் கூறிக்கொண்டு எதையும் செய்து ஜீரணித்துவிட முடியும் என்று எண்ணி, எவ்விதமான நியாயமானஎதிர்ப்புக் கிளம்பினுலும், தேசத் துரோகியின் வேலை அது, என்று கூறி, மக்களை மயக்கி, மக்களுக்கு இன்னல் நேரிடும் போதெல்லாம், தேசபக்திக்காக, கஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ளுங்கள் என்று உபதேசம் செய்து, அடக்குமுறைகள், அனியாய வரிகள், அடங்காப் பிடாரிச் செயல்கள் ஆகியவற்றினைக் கையாளும் போதெல்லாம், இவ்வளவும் தேசநலனுக்காகச் செய்கிறேன், தேசபக்தியுள்ளவர்கள் இவைகளை ஆதரித்தே தீரவேண்டும் என்று பேசிக்கொண்டு, தேசப் பிதா— தேசத் தலைவன்—தேசிய விடுதலை வீரன் என்ற விருதுகளைச் சூட்டிக்கொண்டு, அதே விருதுகளைக் காட்டி வெளி நாட்டாரிடம் விசேஷ மரியாதையும், விளம்பரமும் பெற்று, மணிமுடி தரித்த மன்னர் களைவிடச் செல்வாக்குப் பெற்று கொடுங்கோலர்கள் கண்டு வெட்கப் படக்கூடிய அளவுக்கு அதிகார வெறி பிடித்தலைந்து, சிரம் அசைத் துக் கரம் காட்டி, செக்கு மாடு ளென மக்களை ஆக்கி, ஆட்சி புரிந்து வந்த, சீனத் தேசியத் தலைவன், அமெரிக்காவின் செல்லப் பிள்ளை, நேருவின் நண்பன், பிரிட்டிஷ் பிற் போக்காளர்களின் தோழன் சியாங்கேஷேக்கை எதிர்த்துக் கடும் போரிட்டு, வெற்றி பெற்று மக்க ளாட்சியை அமைத்துக் காட்டினன் மாசேதுங்—இந்த வெற்றிக்கு முன் தினம் வரையில், சீனத்தேசியத் தாட்களால், மிகமிகத் துச்சமாக கருதப்பட்டு வந்த, சாமான்ய சீனன்! தேசபக்தியின் சக்தியை நம்பி, மக்களை அடக்கி ஒடுக்கிடும் கொடுமையைச் செய்துவெற்றிபெற முடியாது என்ற புது உண்மையை உலகுக்குச் செயல் மூலம் விளக்கி விட்டான், மாசேதுங். தேசபக்தி வசீகரமான சக்தி வாய்ந்தது— அந்த மாயத் திரைக்குப் பின்புற மிருந்து எதை வேண்டுமானலும் செய்துவிடமுடியும் என்றுதான் மமதையாளன் சியாங் எண்ணினன் மக்களின்போரிடும் சக்தியின்முன்பு தேசபக்தி எனும் மாயச் சக்தியும் மண்ணுகித் தீரும் என்ற மகத்தான உண்மையை மாசேதுங் மானிலத் துக்கு அறிவித்துவிட்டான். மற் மாவீரர்களின் வெற்றிக்கும் மாசே துங் பெற்றுள்ளவெற்றிக்கும் உள் மகத்தான வித்தியாசம். இதுதான் சாகாவரம் பெற்றது என்று எந்த தேசபக்தி எனும்பாசத்தைச் சியாங் நம்பினுனே, அந்தச்சக்தி மக்களின் நலனுக்கு ஊறுதேட முனைந்தால் தவிடுபொடியாக்கப்படும் என்பதை விளக்கிவிட்டான். தேசபக்தி என் பேசி, தேசமென்றால், பூமி, என் எண்ணிக்கொண்டு, அதை அன் யர் கைப்பற்றிக்கொள்ளாதப பாதுகாப்பது மட்டுமே, தேசப யின் கடமை, என்று தவருகத் துவம் கூறி வந்தனர்—அ தகர்த்தெறிந்து, தேசம் என் மரமும் மண்ணும், கடலும் ஆறு மலையும் மட்டுமல்ல, மக்கள் தேசத்தை உருவாக்கும் மக்கள் தேசவளத்துக்கு, தேசநலனுக்கு தமது உழைப்பைத் தரும் மக்

(அடுத்த பக்கம் பார்க்க)

12-ம் பக்கத் தொடர்ச்சி

தோன்றுமல்லவா, அதுபோலவே, ஆத்திரத்தால், நம்மைத் தவருக எண்ணிக்கொண்டு அப்பாவி என்று தூற்றும் பெரியார் கண்முன், நாம் திராவிட முன்னேற்றக்கழகத்தை உருவாக்கி, வளமானதாக்கி, விடுதலைப் போருக்குரிய கருவியாக்கிக்காட்டி, கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்துக்காட்டி, தூயஉள்ளத்துடன், "பெரியாரே! அப்பாவிகள்! துரோகிகள்! என்று தூற்றினீரே—அப்பாவியும் துரோகியும் செய்யக்கூடியது என்ன, நாங்கள் செய்துமுடித்தது என்ன? பாருங்கள்! உமது தூற்றல் நியாயமா என்பதைக்கூறுங்கள்—எண்ணியாவது பாருங்கள்—" என்று கேட்கமுடியும்—கேட்கவேண்டும். எனவே தோழர்களே! தூற்றல்வளர, வளரப் பணிபுரியும் ஆர்வம் நம்மிடம் வளரவேண்டும். அப்பாவிகளல்ல, ஆர்வமிக்கவர்கள், கொள்கையில் உறுதிகொண்டவர்கள், காரியமாற்றக்கூடியவர்கள், என்பதை, நீங்கள் ஏற்கனவே செய்துகாட்டி வருகிறீர்கள்—திராவிட முன்னேற்றக் கழகக்கிளைகளை ஆங்காங்கு அமைப்பதன்மூலம். மகிழ்ச்சி! நன்றி! இம்முறையில் மேலும் பணிபுரிந்து செல்வோம் — விரைவில், அவர் பேச்சும் போக்கும் மாறிடக்காண்போம். நம் அப்பாவிகளல்ல, துரோகிகள் அல்ல, என்பதை விளக்க அதுவே தக்கமார்க்கம் — வீரர்வழி—திராவிடப்பாதை—முன்னேறிச்செல்வோம் வாரீர், என்று அழைக்கிறேன்—உங்கள் ஆர்வமிக்க பணிகண்டு மகிழ்கிறேன் — நன்றி கூறிக்கொள்கிறேன்.

—அண்ணாத்துரை

முன்பக்கத் தொடர்ச்சி

தான், முக்கியம்—தேசபக்தி என்பது, அந்தமக்களுக்கு நல்வாழ்க்கை அமைப்பது தான், என்ற அரிய உண்மையை, மாசேதுங் விளக்கிக்காட்டி விட்டான். மக்களாட்சியை விரும்பும் எவரும் இந்த மகத்தான வெற்றியைப் பாராட்டத்தான் செய்வர்.

தேய்ந்துபோய்த், தேற்றுவாரும் ஆற்றுவாரும் அற்றுப்போயுள்ள, சியாங் சீனுவை, இன்னமும், சில வல்லரசுகள் அங்கீகரித்துக் கொண்டுள்ளன—அக்ரமம் மட்டுமல்ல இது, அர்த்தமற்ற வீம்புமாகும்.

சில வல்லரசுகள், சியாங்கைநம்பி, சீனுவில் பெரும் பணத்தைக்கொட்டித் தொழில் பல நடத்திச் சுரண்டிக்கொண்டுள்ளன—இனி இச் சுரண்டல் முடியாதே என்ற கவலை, அவைகளின் கண்ணையும் கருத்தையும் குருடாக்கிவிட்டன. கலகவிதை தூவலாமா, அல்லது உலகப்பெரும் போரையே துவக்கிவிடலாமாஎன்று எண்ணிக்கொண்டுள்ளன. இந்தியா, இந்நிலையிஎ இல்லை— சீனுவைச் சுரண்டும் நாடல்ல இந்தியா—மக்களாட்சியை வரவேற்கக் கடமைப்பட்ட நாடு—எனினும், இந்தியா இன்னமும், மாசேதுங் அமைத்துள்ள புதிய சீனக்குடிஅரசை அங்கீகரிக்கவில்லை! கோடி கோடியாக டாலர்களைக் கொட்டிப் பார்த்தும், அமெரிக்கா தோற்றுவிட்டதை, இந்தியா நன்கு அறியும்—ஒவ்வொரு மாகாணமாகச் சியாங், சீனுவில் தன் பிடியை இழந்த சம்பவங்களையும் அறியும். மக்களின் மனதிலே இடம் பெற்றவன் என்று புகழப்பட்ட சியாங், இருக்கும் இடந் தேடி அலையும் நிலை பெற்றிருப்பதும் தெரியும்—தெரிந்தும் புதிய சீனக் குடிஅரசை அங்கீகரிக்க மனமின்றி இருக்கிறது. இந்தத் தவறைச்செய்துகொண்டே, நேரு, அமெரிக்கா செல்கிறார், வரவேற்பு வைபவத்தில் ஈடுபட. சரியல்ல. அமெரிக்கா செல்லுமுன், மாசேதுங்கின் மகத்தான வெற்றியைப் பாராட்டிவிட்டுச்சென்றிருக்கவேண்டும்—ஆசியாவிலே, இந்தியாவும், சீனுவுமே, பெரிய பூபாகங்கள்—இரு நாடுகளும் ஒரே 'முகாம்' என்ற நிலை ஏற்பட்டுவிடுமானல், உலக வல்லரசுகளின், ஆணவம் மறைந்தே போகும். இதை எண்ணியாவது புதிய சீனக் குடிஅரசை, இந்திய சர்க்கார் அங்கீகரித்திருக்கவேண்டும். புதிய சீனக் குடிஅரசை அங்கீகரிக்கும்படி, இந்திய சர்க்காருக்கு அறிவுறுத்த, முற்போக்கு நோக்கம் கொண்ட எல்லாக் கட்சியினரும் முன்வரவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் இத்தகு முயற்சியில் தனது பங்கைச்செலுத்தத் தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். மாசேதுங்கின் மகத்தான வெற்றியைப் பாராட்டி, புதிய சீனக் குடிஅரசை வரவேற்கிறோம். வாழ்க புதிய சீனு! வளர்க மக்களாட்சி!!

❊

## அனுதாபம்

பூந்தோட்டத்திலே, மணமற்ற மலர்கள் பல பூத்திடுவதுண்டு—காட்டிலே மலரும் ரோஜா கவனிப்பாரற்றுப் போவதுண்டு. செல்வாக்கும் விளம்பர ஒளியும் நிரம்பிய காங்கிரஸ் கட்சியில் இல்லாததால், அதைக் கண்டிக்கும் போக்கினராக இருந்ததால், பொதுமக்கள் மன்றத்திலே, தகுதிக்கும் திறமைக்கும், பண்புக்கும் பயிற்சிக்கும் ஏற்ற அளவிலும் முறையிலும், இடம் பெருமல்—இடம் பெற முடியவில்லையே என்பதால் மனம் உடையாமல், கடமையை ஆற்றுவதிலே களிப்பும், நேர்மைக்காகப் போராடுவதிலே வீரமும் காட்டிவந்த நண்பர் பாரிஸ்டர் எ. கே. பிள்ளை அவர்களின் திடீர் மரணம், நம்மைத் திடுக்கிடச் செய்துவிட்டது.

இன்றைய காங்கிரசின் ஆட்சிப் போக்கு, மக்களின் மாண்பைக் கெடுக்கும் வகையானது என்பதை எதிர்ப்பு ஏளனத்துக்கு அஞ்சாது எடுத்துரைத்து வரும் துணிவு கொண்டவர்களிலே, பாரிஸ்டர் பிள்ளை முக்கியமானவர். பிற்போக்காளர்களெல்லாம் புரட்சி வீரர்கள் என்று புகழப்படும் இந்நாளில், அந்நாளில் லெனின் நடாத்திய புரட்சியிலே, பங்குகொண்ட M. N. ராய் எங்ஙனம் ஏளனத்துக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறாரோ, அதுபோலவே, பாரிஸ்டர் பிள்ளையின் நிலையும், அமைந்துவிட்டது. ஆனால் அவர் அது குறித்து ஆயாசப்பட்டதில்லை, ராயுடன், தோழமை பூண்டு, அரசியல் அறிவுத் தெளிவை அறிஞர்களுக்கு அளிக்கும் அரும்பணியினைத் திறம்பட நடத்தி வந்தார்.

சீமையில் படித்துக்கொண்டிருக்கும்போதே, 1924ல், காந்தியாரின் பொது அழைப்பின்படி, பள்ளியை விட்டு வெளி ஏறி, கிளர்ச்சியில் ஈடுபட்டவர்; திருவிதாங்கூர், கொச்சி, மலபார் பகுதிகளில். காங்கிரசின் போக்குப்பிறகு, பாசீசமாகிறது என்

(7-ம் பக்கம் பார்க்க)

# பண்பு பட்டுப் போகவில்லை

6-ம் பக்கத் தொடர்ச்சி

பட்டுப்போகவில்லை — சற்று வளர்ந்திருக்கிறது, பட்ட கஷ்டத்தால், அவரிடம் பெற்ற பாடத்தால். ஆகவே, ‘துரோகி’ என்று என்னை ஆத்திரம் காரணமாகஅவரே தூற்றும்போதும்சரி, அவரை மகிழ்விக்கும் வழி என்னைத்தூற்றுவதுதான் என்று எண்ணிக்கொண்டுபேசும் ஒருசிலர் என்னைத் ‘துரோகி’ என்று தூற்றும்போதும் சரி, நேர்மைக்காக, நீதிக்காக, திராவிடமக்களின் உரிமைக்காகப் பாடுபடும் பெரியாரை, ஆதிக்கக்காரர்கள், அரசியல், சூதாடிகள், வைதீக வக்கிரங்கள், ஆகியோர், தேசத்துரோகி, மதத்துரோகி, என்று தூற்றுகிறார்களல்லவா — அந்தத்தூற்றல், எப்படி ஏமாற்றத்தால் ஏற்படும் ஆத்திரத்தின்விளைவோ, அது போன்றதே தான் என்னைத்‘துரோகி’ என்று தூற்றுவதும், என்று எண்ணி மனதைச் சமாதானப்படுத்திக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின்மூலம், அரசியல் சூதாட நான் விரும்பவுமில்லை, அப்படி அந்தச் சூதாட நான் விரும்புபவனானால், பலவருஷம் பணியாற்றியகழகத்தை அதற்குப் பயன்படுத்த முயன்றிருப்பேன்—முடியாது என்று ஏற்பட்டால்தானேபுதுமுயற்சியில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்படும். அதுபோன்ற ‘முயற்சி’ நான் எப்போதாவது செய்து பெரியார், என்னைத்தடுத்தாரா, கழகத்தவருக்குச் சொன்னாரா? சேலம் மாநாட்டுக்குப்பிறகு, தேர்தல் விவகாரத்திலே, அக்கறையே அற்றுப்போயிருப்பவன்நான், திருச்சிமாவட்டத்திலே சிலதிங்களுக்குமுன்பு ஒரு இடைக்காலத்தேர்தல் வந்தபோது, கரூர்தோழர்இரத்தினம் அபேட்சகராக நிற்கவிரும்பியபோது, அவரைக் கழகத்திலிருந்து ராஜிநாமாச் செய்யும்படி வலியுறுத்தி, கடிதம் எழுதிவாங்கியிருக்கிறேன். சேலம் மாநாட்டுக்குப்பிறகு இன்றுவரை, எந்தத்தேர்தல் பிரசாரக்கூட்டத்திலும் நான் கலந்துகொண்டவனல்ல. பெரியாராவது சில இடங்களிலே, பேசியிருக்கிறார். இவ்விதமாக நான் இருந்துவருகிறேன் — இருந்தும் திராவிட முன்னேற்றக்கழகத்தின் உள்எண்ணம் ‘பதவி தேடுவது—தேர்தலை நாடுவது’ என்று பழிசுமத்துவது, சரியல்ல—என்பது, பழிசுமத்திப் பேசுபவர்களுக்கே தெரியும்—ஆயினும் பாவம், அவர்கள் என்ன செய்வார்கள், நமது முயற்சியைக்குலைக்க, எதையாவது சொல்லவேண்டுமே, என்பதற்காக, பொருளும் பொருத்தமும் அற்ற பழி சுமத்திப்பார்க்கிறார்கள். இதுபலனற்ற வேலை. எனவே, இதைக்குறித்துக்கவலைப்படவேண்டாமென்று திராவிட முன்னேற்றக்கழகத் தோழர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏதோ நானும் ஒருசில நண்பர்களும், பொதுவாழ்வில் புகுந்திருப்பதே, வயிற்றுப் பிழைப்புக்காகத்தான், என்று கூறுகிறார்கள். இதைவிடக் கேவலமாக ஏச முடியாது; சகித்துக்கொள்கிறேன். பொதுமக்கள், ‘கப்பரையும் கையுமாகக் கஞ்சிக்கலையும் ‘நிலையில் நான் இருந்ததைக் கண்டதில்லை, பெரியாருடன் கூடி நான் ‘பொன் ஓடு’ பெற்றதையும் காணவில்லை! எனவே, அவர்களின் ‘தீர்ப்பு’ எப்படி இருக்கும் என்பது எனக்குத் தெரியும்.

பொதுவாழ்க்கையிலே, இப்படிப்பட்ட ‘இழிமொழி’யைப் பெறுவது நிலாச் சோறு — உண்மை நஞ்சு அல்ல! எத்தனை ஆயிரம் பேர் கூற நான் கேட்டிருக்கிறேன் என் பாழும் காதால், பெரியார் முஸ்லீம்களிடம் பணம் வாங்கிக்கொண்டு பேசுகிறார், வெள்ளைக்காரனிடம் பணம் வாங்கிக்கொண்டு பேசுகிறார், காங்கிரசில் பணம் எடுத்துக்கொண்டு போய்விட்டார், என்ற பழிமொழிகளைப் பலர் கூறுவதைக் கேட்டிருக்கிறேன்! அதனால் எனக்கு அவரிடம் பற்றோ மதிப்போ, போயிற்றா. அதுபோலத்தான் இப்போது நான் தூற்றப் படுகிறேன்—இதிலே வருத்தப்பட என்ன காரணம் இருக்கும்—அலசிப்பார்த்தால் சந்தோஷம் கூட வரும், “ஓஹோ! நம்மை இப்படி எல்லாம் ‘பழிபேசி’த்தான் ஒழிக்க முடியும் என்று நிலைமை வளர்ந்திருக்கிறது போலும்” என்று எண்ணத் தோன்றும். நான் அந்த அற்ப சந்தோஷம்கூடப்படவில்லை. நான் என்னைப் ‘பெரியார் பரம்பரை’ என்று எண்ணிக்கொண்டு பூரிப்படைகிறேன்—‘பெரியார் பரம்பரை’ என்றால், வீண் பழியையும் இழி மொழியையும் தாங்கிக்கொள்ளும் பண்பு என்று நான் பொருள் கொள்கிறேன் நண்பர்களே! என்னைத் தூற்றுவது போலத்தான், உங்களையும் தூற்றி வருகிறார்கள்—கவலையும் வருத்தமும் கொள்ள வேண்டாம்—இப்போது போலவே, ஆர்வத்துடன், திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆங்காங்கு அமைக்கும் அரும்பணியைத் திறம்படச் செய்து வாருங்கள்—பிறகு பாருங்கள், தூற்றினவர்கள் தோழமை கொண்டாட வரும் காட்சியை.

திருமணப் பிரச்னையைச் சாக்காகக்கொண்டு, நாம், திராவிடர் கழகத்தைக் கைப்பற்ற முயற்சிப்போம், அம்முயற்சியில் ஈடுபடுவதற்காகப் பேசிக்கொண்டிருப்போம், அந்தப்பேச்சை வைத்துக்கொண்டு நம்மை ஒழித்துக் கட்டலாம், என்று எண்ணினர்—ஏமாற்றமடைந்தனர் — நாம் வேறுபாதை வகுத்துக்கொண்டோம் — திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்துக் கொண்டோம். தாக்குதல் இருக்கும்—போட்டிகள் நடைபெறும்—படை எடுப்புகள் இருக்கும்—என்றெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டிருந்தனர்—பாதை புதிது, போகிறேன் பராபரமே! என்று நாம் கூறிவிட்டோம், தீட்டிய வாள் வீணாகிறதே, திரட்டிய படைக்கு வேலை இல்லையே, என்று திகைப்பு ஏற்படுகிறது—சரி, இனி, வலியச் சென்று சண்டைக்கிழுக்கலாம் என்று தோன்றுகிறது—உங்களை ‘அப்பாவிகள்’ என்றும், என்னைத் ‘துரோகி’ என்றும் தூற்றுவது, அந்த ரகமான பேச்சுத்தான்! ஆனால் நாம், திகைப்பில் இல்லை—தெளிவாக இருக்கிறோம்—எனவே, தூற்றலைக் கேட்டுத் துடி துடித்திட மறுக்கிறோம்.

பயல்கள், படை எடுத்துக் கொண்டுதான் வரவில்லை—போகட்டும்—புதிய கழகம் அமைக்கிறார்களே, இதிலே ஏதாவது, கொள்கை மாற்றம் செய்வார்கள், பிடித்துக் கொள்ளலாம் சண்டைக்கு, அதையே சாக்காகக் கொண்டு என்று பார்த்தார்கள்—அதற்கும்

# திகைப்பில்லை—தெளிவாக இருக்கிறோம்

இடம் கிடைக்கவில்லை—நம்மிடம் கொள்கை மாற்றம் ஏதும் இல்லாததால்.

புதிதாக 'இதுகள்' துவக்கும் கழகத்துக்குக் கிளைகள் வளராது என்று எண்ணினர், சென்னையிலிருந்து தூத்துக்குடிவரை, எங்கும்கிளைகள் எழிலுற வளருகின்றன—வளர்ந்த வண்ணம் இருக்கின்றன.

ஏமாற்றம்—திகைப்பு—ஏற்படத்தானே செய்யும்! என்ன செய்வது? தூற்றுகிறார்கள்! ஓநாய் கூறிற்றாமே ஆட்டுக்குட்டியிடம், நீ, தவறு செய்யவில்லை என்றாலும் உன் தாயார் செய்திருக்கிறாள் முன்பு, அதற்காக இப்போது உன்னைத் தண்டிக்கிறேன் என்று. அதைவிட விசித்திரமாக இவர்கள் பேசுகிறார்கள் நம்மைப்பற்றி. திராவிட முன்னேற்றக் கழகம், எதிர்காலத்திலே, இன்னின்ன குற்றங்கள் செய்யப்போகிறது, எனவே, அதை இப்போது கண்டிக்கிறோம் என்கிறார்கள். விந்தையான நியாயமாக இருக்கிறதல்லவா இது! நாயே! பேயே!—என்று வேலைக்காரனை, கோபமாக எஜமானன், கண்டித்தானாம் ஒருநாள். அவன் நண்பன் திடுக்கிட்டுப்போனான், ஏனெனில், வேலைக்காரன் ஒரு தவறும் செய்யவில்லை, காரணமின்றித் திட்டுகிறார் எஜமானர்—பொறுக்கமுடியவில்லை நண்பனால், "ஏன்வீணுகத்திட்டுகிறீர்கள்? அவன் ஒருதவறும் செய்யக்காணோமே, ஏன் திட்டுகிறீர்கள்?" என்று கேட்டானாம்.

"ஒரு தவறும் செய்யத்தான் இல்லை—என்றாலும், இவன் இனிமேல் எப்போதாவது தவறு செய்தால், கண்டிக்க நமக்கு நேரம் இருக்குமோ இராதோ, என்பதற்காக, இப்போது கண்டிக்கிறேன்" என்றாராம் எஜமானர். அந்த விதமான விபரீதப் போக்கு, ஆதரவாளர், தலைவருக்கு — திராவிட முன்னேற்றக் கழகம், தவறு செய்யப் போகிறது எதிர்காலத்தில், அதற்காக நான் இப்போது கண்டிக்கிறேன் என்று வாதாடுகிறார். இது எதைக் காட்டுகிறது? அவர் அடைந்துள்ள ஏமாற்றத்தை! இல்லையானால், அவர் செய்யவேண்டியது இதுவல்லவே — திராவிட முன்னேற்றக் கழகம் தவறு செய்யும் போது, தாக்கித் தகர்த்து விடலாம் என்ற தன்னம்பிக்கையுடன் அல்லவா இருக்கவேண்டும்! முடியவில்லையே அவரால்!! ஏன்? திராவிட முன்னேற்றக்கழகம், தவறு இழைக்காது, கொள்கையில் வழுவாது, திராவிடக் குடி கெடுக்கும் குணம் கொள்ளாது என்பது அவருக்கு நன்றாகத் தெரியும், எனவே தவறு செய்யும்போது தகர்க்கலாம் என்று நம்பிக்கை வர இடமில்லை. எனவே, தவறு செய்யும் என்றும் பழி கூறிப் பார்ப்போம், பலித்தவரையில் பலிக்கட்டும் என்று பார்க்கிறார். பகுத்தறிவுத் தந்தை, 'புராண காலமுறை'யில் போர் புரியப் பார்க்கிறார். தேவகிக்கு ஒரு மகன் பிறந்து உன்னை அழிக்கப் போகிறான் என்று அசரீரி கூறக்கேட்ட கம்சன், தேவகிக்குப் பிறந்த குழந்தைகளை எல்லாம் கொன்றால், தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணியதாக, புராணம் இருக்கிறதே, அதுபோல், திராவிட முன்னேற்றக் கழகம், எதிர்காலத்தில் கேடு செய்யும், எனவே அந்தக்கேடு வாராதிருக்க, திராவிட முன்னேற்றக் கழகத்தை இப்போதே எதிர்க்கிறேன், என்று கிளம்புகிறார்! இவரா, இப்படிப்பட்ட ஓநாய் முறை—கம்சன் முறை—ஆகியவை போன்றவைகளைக் கையாண்டு பார்ப்பது! ஏன் இந்த நிலை! உண்மையில் ஏக்கமடைகிறேன்.

அப்பாவிகள் என்று உங்களையும் துரோகி என்று என்னையும், அவர் தூற்றுவது, நிச்சயமாக, ஏமாற்றத்தின் விளைவு. இனியும் ஏமாற்றம் அடுக்கடுக்காக வரத்தான் போகிறது. ஒரு சிலர் அவர் உரையைக் கேட்டுக்கொண்டு, நாம் ஏதோ சுயநல நோக்கத்துக்காக வேலை செய்பவர்கள் என்று எண்ணுகிறார்கள்—நமது பணி, அவர்களின் மனமருளைத் தெளியவைக்கும் விதமாக இருக்கும் - ஏமாற்ற மடைவார்கள், நாம் தேர்தலில் ஈடுபடுவோம், அப்போது, கேலியாலும் கண்டனத்தாலும் தாககலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்—அதிலும் ஏமாற்றமடையப் போகிறார்கள். இன்னமும் தெளிவாகக் கூறுவதானால், திராவிடர் கழகத்தை தேர்தல் பிரசாரக் கருவியாக்கப் போகிறார் பெரியார், அப்போது, திராவிட முன்னேற்றக் கழக முகாமில், வந்து சேரப் போகிறார்கள் இன்றைய ஆதரவாளரில் பலர்.

திராவிட முன்னேற்றக் கழகம், முப்பது நாள் முத்து மழை பொழிந்து விட்டு பிறகு மூலையில் உட்கார்ந்து விடப் போகிறது என்று எண்ணுகிறார்கள்—தங்கள் சாபம் பலிக்கும் என்று எண்ணிக்கொண்டு. அதிலேயும் ஏமாற்றமடையப் போகிறார்கள். ஏனெனில் அவர்கள், அடிப்படைத் தவறின்மீது தங்கள் 'ஆருடங்களை'க் கட்டுகிறார்கள்—அடிப்படை தவறு, உங்களை 'அப்பாவிகள்' என்றும், என்னை 'துரோகி' என்றும் எண்ணிக்கொண்டு பேசுவதுதான். நீங்கள் அப்பாவிகளுமல்ல, நானும் துரோகியல்ல. அவர் அப்படி நினைக்கிறார். அடிப்படைத் தவறு அது.

நான் துரோக சிந்தனையுடன் உங்களைத் தூண்டிவிட்டதாகவும், நீங்கள் ஏமாந்து போனதாகவும் எண்ணிக்கொண்டே, மேலால் மேலால், கருத்துக் கோட்டை கட்டுகிறார். உண்மையில், நடந்தது வேறு. நீங்கள், தெளிவுடனும் தீரத்துடனும், தெரிவித்த எண்ணங்கள், என் மனதிலே கருத்தை உருவாக்கிற்று. அதை அவர் அறியமாட்டார். அடிப்படையிலே அவர் தவறு செய்வதால் தான், மேலால் கிளம்பும் ஒவ்வொன்றும், நிலைக்கமுடியாதனவாகின்றன. எனக்குப் பொது வாழ்விலே சலிப்பு ஏற்பட்டதுண்டு பலமுறை—எப்போதும் அதிலிருந்துகொண்டு பொற் கோட்டை கட்ட வேண்டும் என்ற எண்ணம் எழுந்ததில்லை. நன்றாக நினைவிலிருக்கிறது—ஒரு மோட்டாரில், பெரியாருடன், நானும் பொன்னம்பலனாரும், ஜோலார்ப்பேட்டை பக்கமாகப் போய்க்கொண்டிருக்கிறோம், பத்தாண்டுகளுக்கு மேலிருக்கும். நான்சொன்னேன், "பொதுவாழ்க்கைக்கு நாற்பது வயதுக்கு மேல்தான்வரவேண்டும், ஏனெனில், நாற்பது வயது வரை, குடும்பவாழ்வில் ஈடுபட்டு, குதூகலமாக இருந்துவிட்டு அனுபவிக்கவேண்டியதை அனுபவித்துவிட்டுப் பிறகு பொதுவாழ்வில், புகுந்தால், உங்களைப்போல மும்முரமாக, தீவிரமாக வேலைசெய்யமுடியும் என்றேன் — முதுகை

# தூற்றல் உறுதியைக் குலைக்காது

தட்டியபடி பெரியார் சொன்னார், முகமலர்ச்சியுடன், "நீ, பைத்யக்காரன்! பொதுவாழ்வில் இருந்தபடி, வாழ்விலின்பத்தை அனுபவிக்க முடியாதா, என்ன,! உனக்கு அது தெரியவில்லை" என்றார். அன்று இருந்து இன்று வரை, பொதுவாழ்வைச் சொந்தத்துக்காகப் பயன் படுத்தும் போக்கு என்னிடம் என்ன கண்டார்? கண்டிக்கும் உரிமை உண்டே அவருக்கு, எப்போதாவது என்னைக் கண்டிக்க வேண்டியசந்தர்ப்பம் வந்ததா? அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்பது போல, இப்போது அவரும் அவர் ஆதரவாளர்களும் கூறுகிறார்களே, ஆகஸ்ட்டு, கருப்புச் சட்டை போடாதது, தூத்துக்குடி போகாதது, வேலைக்காரி, நல்லதம்பி எனும் கதைகள் தீட்டியது என்று ஒரு பட்டியல்' இவைகளுக்கெல்லாம் பிறகுதானே, ஈரோடில், 'பெட்டிச் சாவியை'த் தந்தது! எப்படி முடிந்தது? இந்தத் 'துரோகி' ஈரோடு மாநாட்டிலே, 'பெட்டிச் சாவி'யைப் பெற்றானே! ஒரு தோழராவது, அப்போது, இன்று பேசும், 'துரோகம்' பற்றி, எண்ணினார்களா? பெரியாருக்குத்தான், அப்படி எண்ணம் இருந்ததா? இருந்தால், அவர் கூறுவாரா, "பெட்டிச் சாவியை ஒப்படைக்கிறேன்" என்று.

இவைகளை எல்லாம் மக்கள் மறந்துவிடுவார்கள் என்று எண்ணலாமா?

துரோகி! எவ்வளவு இலேசாகக் குற்றம் சாட்டி விடுகிறார்!

பொதுவாழ்வால் வயிறு வளர்ப்பவர்கள்— எவ்வளவு கேவலமான குற்றச்சாட்டு—இதற்கு என்ன காரணம் காட்டமுடியும், நான் ஏழை என்பதும், அவர் இலட்சாதிபதியின் திருமகனார் என்பதும் தவிர!!

இதைச் சொல்வதால் என்னைப்பற்றித்தானா பொதுவாக மக்கள், எடைபோட—கணக்குப் பார்க்க—விரும்புவார்கள்? பெரியாரைப் பற்றியும் கூடத்தானே!

இன்னமும் சொல்லப்போனால், பல்லக்குத் தூக்கிக்கே இவ்வளவு பலன் கிடைத்ததென்றால், பல்லக்கில் சவாரி செய்தவருக்கு அதிகமாகத்தானே கிடைத்திருக்கும் என்றுதானே பொதுவாகப் பேசுவார்கள். பொதுவாழ்வுத்துறைக்கே பொறுப்பற்றவர்களின் மூலம் ஒரு பழிச்சொல் கிடைக்குமே தவிர, என்னையா இச் சொல் இழிவு படுத்தும்.

இவ்விதமெல்லாம் எண்ணிப் பார்க்க முடியாத மனநிலை ஏற்பட்டுவிட்டது பெரியாருக்கு—ஏமாற்றத்தின் காரணமாக. எனவேதான், தூற்றுகிறார். தூற்றினால் கோபம் பிறந்து நாம், சுடுசொல் கூறுவோம், அதைத் துருப்புச் சீட்டாக்கிக் கொள்ளலாம் என்று எண்ணுகிறார். இங்குதான், என்னை அவர், பதினைந்தாண்டுக்குப் பிறகும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பது நன்றாகத் தெரிகிறது. நான் தூற்றுபவர்களைத் தூற்றுபவனல்ல. வீம்பு அறியாதவன்—வீண் வேலைக்குப் போகாதவன்—எனவே, என்னைத் தூற்றினாலும், துரோகிப் பட்டம் கட்டினாலும், பொதுவாழ்விலிருந்து துரத்தித் துரத்தி அடித்தாலும், கோபம் கொண்டு, குதித்தாடுபவன் அல்ல! கொண்ட கொள்கை சரியா, எடுத்துள்ள போக்குச் சரியா என்பதைத்தான் கவனிப்பவனே தவிர, தூற்றுகிறார்களே நாம் சும்மா இருப்பதா என்று எண்ணுபவன் அல்ல! நான் மிக மிகச் சாமான்யன்—சர்வ சக்தி வாய்ந்தவன் என்ற எண்ணம் கொண்டவன் அல்ல! இவ்வளவாவது முடிந்ததே—இதையாவது செய்தோமே—என்ற திருப்தியையே எப்போதும் ஏருவித்துக்கொள்பவன். இப்போது நான், உங்கள் அனைவரின் உள்ளத்தினின்றும் வெளிப்பட்ட உறுதியை, ஆர்வத்தை அரணாகக் கொண்டு, உங்கள் பிரதிநிதியாக இருந்து, உங்கள் காரியத்தைச் செய்பவன் என்று என்னைக் கருதிக் கொண்டிருக்கிறேனே தவிர, என் சாமர்த்தியம், என் சக்தி என்ற ஏமாளித்தனமான எண்ணம் கொண்டு, முன்னணி நிற்கவில்லை. பெரியார், தவறாகக் கருதிக் கொண்டிருக்கிறார், நான் ஏதோ, 'மந்திரக்கோல்' காட்டி, இவ்வளவு பேர்களைக் கூட்டிவைத்துக் கொண்டு ஆட்டமாடுகிறேன் என்று. மிக மிகத் தவறு. கொள்கையை விடாப்பிடியாகக் கொண்ட ஆயிரக்கணக்கான தோழர்கள், என்னைப், பணிபுரியும்படி கட்டளையிட்டு, அதற்கான ஆதரவும் தருகிறார்கள். அவர்கள் பெரியார் தூற்றுகிறபடி, அப்பாவிகள் அல்ல—பெரியார் பெரும்படையில் பணிபுரிந்து பழக்கமுள்ளவர்கள், எப்படி அப்பாவிகளாக இருக்க முடியும்!! ஆர்வத்துடன் பணிபுரியும் பண்பினர். ஆகவேதான், இதற்குள் இவ்வளவு இடங்களிலே திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் தழைத்திட முடிந்தது.

எனவே நண்பர்களே! நாம் நமது பணியைத் திறம்படச் செய்வோம் என்ற எண்ணத்தை அரணாகக் கொண்டு, மேலும் பணிபுரிந்து வாருங்கள்! தூற்றல் பாணம், உறுதி உள்ளத்தைத் துளைத்திடாது! 'துரோகி'ப் பட்டத்தால் நானும் தொலைந்துவிட மாட்டேன், 'அப்பாவி' என்ற வசைமொழிகேட்டு, நீங்களும் ஆற்றலற்றவர்களாகிவிடப்போவதில்லை. ஆத்திரத்தால் அவர் அவ்விதம் பேசுகிறார்—நம் மனக்கண்முன் வேறோர் பெரியார் தெரிகிறார்—மணக்கோலத்தில் அல்ல—நம்மை எல்லாம் தமது மக்களாகப்பாவித்து, ரத்தினங்களே—மாணிக்கங்களே—என்று அன்புரை கூறிய பெரியார், கலையாத சித்திரமாகக் காட்சி அளிக்கிறார். அவர், தந்தகொள்கை எனும் செல்வத்தின்மீது மாசுபடியாதிருக்கவே நாம், திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்துப் பணிபுரிந்து வருகிறோம்.

உண்மையில் நம்மிடம் துரோகச்சிந்தனையோ, சுயநலமோ, கழகத்தைக் கருவியாக்கும் கயமைக்குணமோ இருந்தால்தானே, அவர் அவ்விதமாகவெல்லாம் குற்றம் காட்டும்போது, ஆத்திரம் ஏற்படும். நம்மிடம் இல்லாததை இருப்பதாகப்பாவிக்கிறார்—அவர்நிலை அவ்விதமாகிவிட்டது.

உடலிற்பூசப்பட்ட சந்தனத்தை, பார்வை பழுதானவன், அரைகுறையாகப் பார்த்துவிட்டு, ஐயயோ! இவன் குஷ்டரோகி!!" என்று கூறினால் கோபமாவரும்—சிரிப்புத்தானே வரும். அருகேசென்று, சரியாகப் பாரும்! மணத்தையாவது நுகர்ந்துபாரும் என்றுகூற

(9-ம் பக்கம் பார்க்க)

# பொட்டிட்டார்! ★ ★ பூரித்தார்!!

பொட்டிட்டார்! பூரித்தார்!! இராம-லக்ஷ்மணனுக்குத் திலகமிட நான் செய்தபாக்யமே பாக்யம் என்று அவர் உள்ளம் புளகாங்கிதமடைந்தது!

எம்பெருமான் — ஸ்ரீராமன்— இராவணனைக் கொன்று வீராதி வீரனாய், வெற்றிச் செல்வனாய், விளங்கியதைக் காட்டும் நாளல்லவோ, இன்று என்றார்!

ஆகா! இரக்கமிலா அரக்கரை அழித்து, சீதாமாதாவும், செங்கமலக் கண்ணன் ஸ்ரீராமனும், குதூகலித்த கோலாகல வைபவமன்றோ இன்று, என்று போற்றினார்!

* * *

'வர்ணனை பலமாயிருக்கிறதே, வரதா, என்ன 'கம்பர் மாநாட்டுக்கு' இப்போதே ஒத்திகை ஆரம்பமாய் விட்டதா?'

'என்ன சொல்றீங்க......'

'இல்லே! பொட்டிட்டார், பூரித்தார்! என்று ஏதோ, கூச்சல் போட்டுப் படித்தாயே,......'

'ஓ, அதுவா?'

இராமன், இராவணனை வென்று அயோத்தி வருகிறான். வசிஷ்டர் அவனை வரவேற்கிறார், பூரிக்கிறார், புளகாங்கிதமடைகிறார்! அதுபற்றி, கம்பர் மாநாட்டில் காவியரசனையோடு, பாவம் ததும்பப்பேச, ஒத்திகை நடத்துகிறாய். ஏன், அப்படித்தானே!'

'அதெல்லாம் ஒண்ணுமில்லேங்க! எனக்கேங்க அந்த இழவெல்லாம்!!'

'பின், என்ன நீ படித்தது'

'படிக்கட்டுங்களா?'

'ஊம்...படி!'

"இராவணனை ஜெயித்து நமது வீராதி வீரன் ஸ்ரீராமர் சீதையுடன் ஜெயக்கொடி நாட்டியதைக் கொண்டாடும் விழாவில் நானும் கலந்து கொள்கிறேன் இரண்டாவது தடவையாக. ஸ்ரீராமனைத் துதித்து, நீங்கள் யாவரும் அனுமானைப் போல நடப்பீர்களாக! மேற்கொண்டு நான் சொல்ல என்ன இருக்கிறது? எல்லாம்தான் அனுமார் நமக்குச் சொல்லியிருக்கிறாரே!"

படித்து முடித்தான் வரதன். வாங்கிப்பார்த்தேன், டெல்லியில் நடைபெற்ற தசரா உத்சவத்தில் இந்திய கவர்னர் ஜெனரல் பேசிய பேச்சு அது. அந்த விழாவில் பிரதமர் நேரு, ஏனையமந்திரிகள், ராஜதந்திரிகள், பிரதம சேனாதிபதி கரியப்பா உள்படப் பலர் கலந்து கொண்டனராம். நவராத்திரி விழாவையொட்டி, அங்கு வேஷம் போட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ராமலக்ஷ்மணனுக்குத் 'திலகம்' இடும் திருப்பணியைச் செய்துவிட்டு, பின்னர் போதனை புரிந்திருக்கிறார், கவர்னர் ஜெனரல் ராஜாஜி, வரதன் வாசித்துக் காட்டியது போல.

நவராத்திரி கொண்டாட்டம்பற்றி பல இடங்களில் பலமாதிரியானகதைகள் விளங்குகின்றன. அதில் வடநாட்டாரிடம் வழங்கும் கதை இராமன்-இராவணனைக்கொன்று வெற்றி கொண்டதே, தசரா பண்டிகையாகும் என்பதாகும். இங்கு, மகிஷாசுர மர்த்தனி புராணம், நவராத்திரிக்கு! அங்கு, ராமபுராணம் தசராவுக்கு! அதையொட்டியே டெல்லியில் 'இராம—லக்ஷ்மணனுள்' வேஷம் போட்டு, கொண்டாடியுள்ளனர். அந்த விழாவில் கலந்து கொண்ட கவர்னர் ஜெனரல், இந்திய மந்திரி பிரதானியர் சூழ்ந்திருக்கிறார்கள் என்பதை நினைத்துப் போதனையும் புரிந்துள்ளார்!

* * *

"என்னுங்க, படிச்சிட்டீங்களா?" என்று கேட்டான் வரதன்.

'படித்துவிட்டேன், இந்தா;'

"இராமாயணம் பற்றி நீங்க அன்னைக்கி சொன்னீங்களே, வடநாடு—தென்னாடு என்று........"

"ஆமாம்! இராம—இராவண யுத்தம்வடநாட்டு அரசனுக்கும் தென்னாட்டு மன்னனுக்கும் நடைபெற்ற போர் நிகழ்ச்சி. அதுவே, புராணீகர்களால் கடவுட்கதையாக்கப்பட்டது. இராமனை அவதார புருஷனாக்கினர், அவன் செயல்களை புனிதமானவையென்றனர். இராம-இராவணப்போர், வடவரசன்—தென்னாட்டு மன்னனை, விபீஷண-அனுமார்கள் சகாயத்தால், வென்ற கதைதான் இராமாயணம்"

"அப்ப, சரிதானுங்க!"

"என்ன வரதா, எது சரி என்கிறாய்?"

"ராஜாஜி, தசரா பண்டிகையிலே பேசியிருக்கிறாரே, அதுங்க. சரியாயிருக்கல்ல!"

"எது? எப்படி?"

"வடநாட்டார்—தென்னாட்டாரை ஜெயித்ததற்காகத்தானே, கொண்டாடுறாங்க தசரா பண்டிகை! இன்னைக்கி, நாடு இருக்கிற நிலையிலே, அது சரியாத்தானுங்களே, இருக்கு!!"

"ஓகோ 'இராவணனை, ஸ்ரீராமர் வெற்றி கொண்டமைக்காகக் கொண்டாடும் பண்டிகை' என்று ராஜாஜி சொன்னாரே அதைச் சொல்றியா?"

"ஆமாங்க! அந்தக்காலத்திலே இராவணனை ஜெயிச்சாங்க, அனுமார்களின் உதவியாலே! இப்ப, தென்னாட்டாரை ஜெயிச்சு வர்ராங்க, ராஜாங்க பாஷை இந்தி, இந்தியாவுக்குப் பெயர் பாரத், இன்னும் எல்லாவகையிலும்! ஏன் அவுங்க தசராவிலே, அர்த்தம் இல்லேங்களா?"

* * *

வரதன் வார்த்தைகள் என் சிந்தனையைக் கிளறின. அவன் சொல்லிலும் அர்த்தம் இருப்பதாகவே, எனக்குப் பட்டது.

தசரா—இராமன், இராவணனை வீழ்த்தியதை உணர்த்தும் ஒருபண்டிகை, வடநாட்டாருக்கு! அதில் பேசியவரோ, குட்டிக் கதைகள் மூலம் சாணக்கிய தந்திரங்களைச் சொல்லும் திறமை கொண்டராஜாஜி! எனவே அவர் போதனையின் பொருள், தொக்கி நிற்கவே செய்யும் என்று என் எண்ணத்தில் பட்டது.

அன்று, வடவரசன் தென்னாட்டு

மன்னனை வீழ்த்தினன், வென்ருன் அதற்கு அனுமார், விபீடணர்கள் துணையாக இருந்தனர்!

வடநாட்டு மன்னன், வெற்றிநாள், தசராப் பண்டிகை. அதிலே பேசியிருப்பவரோ, ராஜாஜி, குட்டிக் கதைகளுக்குப்பேர்போனவர். அந்த வெற்றியை எடுத்துச் சுட்டிச் சொல்கிருர், இன்று! 'தசரா கொண்டாடுகிறேம். அது இராமன், இராவணனை வென்ற நாள்' என்று குறிப்புக் காட்டுகிருர்!

அந்தக் குறிப்பு, சாதாரண புராண சம்பந்தமுடையதாக மட்டும் இருக்குமென்று எண்ணுவதற்கில்லை. ஏனெனில், கூறுபவர் குட்டிக் கதைகளுடையார், கூடியிருப்பவர்கள், தசரா தினம் ஏன் கொண்டாடுகிறேம் என்று அறிந்த வடநாட்டு மக்கள்! ஆகவே, வரதன், கூறியது போல, சூசனைச் சொல்லாகவும் இருக்குமோ, என்ற ஐயம் ஏற்படவே செய்கிறது — உண்மையும் நிகழ்ச்சிகளும் அப்படியே இருப்பதால்!

அன்று வடநாட்டு மன்னன் தென்னுட்டு இராவணனை, வீழ்த்தினன், வெற்றிகொண்டான், 'விபீடணர்'கள் சகாயத்தால்.

இந்தியே அரசாங்கமொழி, இந்தியாவின் பெயர் பாரத், மத்திய சர்க்காருக்கு அதிகாரங்கள் என்பவைகள் மூலம், வடநாட்டினர், அவர்கள் கையிலிருக்கும் மத்திய அரசாங்கம், தென்னுட்டு மக்களைத் தன் கைக்குள் சிக்கவைத்து வருகிறது, ஆட்படுத்தி வருகிறது, இராமன் போர் மூலம் வெற்றி கண்டதுபோல!

இராவணனை வீழ்த்த, விபீடணர்கள் கிடைத்ததுபோல தென்னுட்டைச் சிக்கவைக்கவும், ஒத்துழைப்பவர்கள் கிடைக்கிருர்கள்—இருந்து கொண்டே இருக்கிருர்கள்!

எனவேதான், தசரா நாளில் ராஜாஜியார், அந்தச் சம்பவத்தை எடுத்துச் சொல்லியிருக்கவேண்டும்! அவர் சொன்ன, சூசக மொழிகள் யாருக்குப் புரியாவிட்டாலும் அவரது பிரதானியருக்குப் புரிந்திருக்கும். 'ராமனைத் துதியுங்கள்—அனுமனைப்போல நடவுங்கள்' என்று கூறியுள்ளார்.

அனுமன் ராமனிடம் பக்திகொண்டவன் என்பதுமட்டிலுமல்ல, இலங்கையையே நாசமாக்கியவன், முரடன் — குரங்குத்தனம் கொண்டவன் என்று சரிதக் கண் கொண்டு திறன் ஆராய்வோர் கூறியுள்ளனர். அவனைப்போலநடக்குமாறு,போதித்துள்ளார், நமது 'புண்ணிய சிரேஷ்டர்,' பூலோக வசிஷ்டர், ராஜாஜி!

அதேநேரத்தில் இராமனைத் துதியுங்கள் என்றும் கூறியுள்ளார். இராமன், தென்னுட்டு மன்னனை, சூது, மித்திரபேதம்கொண்டு, வீழ்த்தியவன் என்றும் இத்தகு கதையின் உட் பொருளை ஆராய்ந்துரைப்போர் கூறியுள்ளனர். அவனைத் துதிக்குமாறு உபதேசம் புரிந்துள்ளார் — கவர்னர் ஜெனரல்.

தசராகொண்டாடப் பட்டிருக்கிறது, தென்னுட்டு மன்னன் வீழ்த்தப்பட்டநாள், கொண்டாடப்பட்டிருக்கிறது, அங்கு, டெல்லியில்!

தென்னுட்டார்மீது இந்தி திணிக்கப்பட்டுவிட்டது, பாரத்துக்கு கட்டுப்பட்டவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர், அதிகாரங்கள் வளம் தரும் வழிகள் எல்லாம் மத்திய சர்க்கார் என்ற பெயரால் வடநாட்டுக்கு 'பாத காணிக்கையாகச்'செலுத்தவழிசெய்யப்பட்டுவிட்டன!

இந்நிலையில் அங்கு கொண்டாடும் தசராவுக்கு அர்த்தமிருக்கவே செய்கிறது—வடநாடு, தென்னுட்டைத் தன் பிடியில் சிக்கவைத்து வெற்றி கண்டு வரும் நாள் என்பதால்.

அந்தவிழாவில் பொட்டிடுகிருர், பூரிக்கிருர், போதிக்கிருர், ராஜாஜி. மகிழ்ச்சி மலர்கிறது அவருக்கு, மலரச்சொல்கிருர் சூழ்ந்து நிற்பவர்களுக்கு. ஆனல் நமக்கோ, திகிலும் திகைப்புமே ஓடி வருகிறது! உள்ளத்தில் துடிக்கிறது!!

(7-ம் பக்கம் பார்க்க)

## அவசரம் தந்த அல்லல்

16-ம் பக்கத் தொடர்ச்சி

இயலுமா, அமெரிக்கஇயந்திரங்களை வாங்கி வந்தவர்கள், அதன் உழைப்பு, உறுதிப்பாடு குறித்து, விளக்கியவர்கள் எப்படி, வேறு இயந்திரங்களை வாங்குவார்கள்?

இந்தியாவோ, எல்லாத் துறைகளிலும் ஆரம்ப நிலையிலிருக்கிறது. நாட்டு முன்னேற்றத்துக்கான ஆலைகள், திட்டங்களை நிறைவேற்றப் புது இயந்திரங்களைக் கொண[ர] வெளிநாடுகளை எதிர்பார்த்து நி[ற்] கிறது!

அதோடு கூட இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களோ பெரும்பாலும் மூலப் பொருள்கள் தானே ஒழிய உற்பத்திப் பொருள்கள் அல்ல. அப்படி ஏற்றுமதியாகும் மூலப்பொருள்களிலும் ஸ்டர்லிங் பிரதேச நாடுகளுக்குத்தான் அதிகமாயிருக்கிறது. 1948ல் ஸ்டர்லிங் பிரதேசத்துக்கு 131 கோடி ரூபாய் பெறு மான பொருள்களும் டாலர் பிரதேசத்துக்கு 50 கோடி ரூபாய் பெறுமான பொருள்களும் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. புது முறைப்படி, அமெரிக்காவுக்கு இதுவரை ஏற்றுமதியான பொருள்களுக்குக் கிடைத்தது போல ரூ 50 கோடிக்குச் சமமான 27 கோடி டாலர் கிடைக்காது. இன்னும் குறைவாகவே கிடைக்கும்! அமெரிக்காவில் இந்தியா வாங்கிவந்த பொருள்களுக்கு இந்த 27 கோடி டாலர் முன்பு செலுத்தப்பட்டது என்ருல், இப்போது அதைவிட அதிகமாகச் செலுத்தும் நிலை உண்டாகியுள்ளது.

இப்போது பாகிஸ்தான் தன் ரூபாய் நாணய மதிப்பை, ஏனைய நாடுகளைப் போலக் குறைத்துக் கொள்ளப் போவதில்லையென்று அறிவித்துவிட்டது. இதனுல் இந்தியாவுக்கு வேதனைமேல் வேதனையே உருவாகியிருக்கிறது.

இந்தியாவும்—பாகிஸ்தானும் அண்டை நாடுகள், ஒன்ருகயிருந்தவை. இதுவரை எத்தனையோ தகருறுகள், பிரச்னைகள் இரண்டுக்குமிடையே எழும்பினுலும் வியாபார, நிதிவிவகாரம் ஆகியவைகளில் தகராறு ஏற்பட்டதில்லை.

ஆனல் இப்போது பாகிஸ்தான் தன் நாணய மதிப்பைக், குறைக்கவில்லை. வழக்கம் போலவே ரூ 3—5—4 கொண்டது ஒரு டாலர் என்ற மதிப்பீட்டையே கடைப்பிடிக்க முடிவு செய்து இருக்கிறது.

இந்த முடிவைப் பாகிஸ்தான் மேற்கொண்டதற்குக் காரணம், இந்தியாவைவிட அதன் பொருளாதார நிலை சீர்கெடாமலிருப்பதும், இதர நாடுகளிலிருந்து உணவு மு[தலிய]

(2-ம் பக்கம் பார்க்க)

# அவசரம் தந்த அல்லல்

ஆய்ந்தோய்ந்து பார்த்துக் காரி ம் செய்யமாட்டார்கள்!

அவசரமும் 'அவனுக்கு' முன் ம் செய்துவிடவேண்டும் என்ற சையும் எழும்பும்!

விளைவுகளைப் பற்றி நினைத்து ம் செய்வது நலன் தருமா, ன்மை பயக்குமா என்று சிந்திக்க ட்டார்கள்!

ஆசை கண்ணை மறைக்கும், ஆர் ம் அறிவுக்குத் திரையிடும், அதன் டிவு ஆபத்தில் கொண்டுபோய் டும். போட்டி உள்ளம், பொங்கும் பாறாமை, தாங்கமுடியாத தற் பெருமை, தன்னால் எதுவும் ஆகும் ன்ற மனோபாவம் கொண்டவர் ருக்கு ஏற்படும் சர்வ சாதாரண கதி இது.

இந்தச் சர்வ சாதாரண ரகத்தில் ட்டுமக்களின், நாயகர்களாக, ஒரு ரும் உபகண்டத்தை நிர்வகிப்ப களாக, ஆனவர்கள் சேர்வதென் ,பச்சாதாபப்படக்கூடியது மட்டு ல, பதறலைக் கொடுக்கக் கூடிய ரியமாகும்.

* * *

கடந்த உலகப் போர் முடிவின் ரணமாகப் பிரிட்டனின்பொருளா ர நிலையும், மக்களின் வாழ்க்கை யும் பெருத்த கேடுபாடுகளுக்கு ளாயிற்று. போரில் ஈடுபட்ட வீரர் , திரும்பியதும் அவர்களுக்கு லை கொடுத்து, அவர்களை ஆத கும் பெரும் பொறுப்பு ஏற்பட் , அங்குள்ளவர்களுக்கு. இதன் ளவாக, தொழிற்சாலைகள் நிரம் நாடான பிரிட்டனில், மாஜி ணுவ வீரர்கள், தொழிற்சாலை லும், இன்னபிற பொருள் உற் திச் சாலைகளிலும்—புகுந்தனர்; த்துக்கொள்ளப்பட்டனர். அதிக களும், பொருள் உற்பத்தியில் னம் செலுத்த அதிக நேரமும் டத்தன் விளைவாக, பிரிட்டனில் உற்பத்திப் பொருள்கள் குவிந்தன. பிரிட்டன், சாதாரணமாகவே, தனக்கு வேண்டிய ஜீவாதாரப் பொருள்களுக்கு வெளிநாடுகளை எதிர்பார்த்திருக்க வேண்டிய நாடாகும். தன்னிடம் உற்பத்தியாகும்பொருள்களை வெளிநாட்டு மார்க்கெட்டுகளுக்குக் கொண்டுபோய்க்குவித்து அங்கிருந்து, தனக்கு வேண்டிய இன்றியமையாத பொருள்களை இறக்குமதி செய்யும். போர்ப் புயல் வீசியபின், பிரிட்டனின் ஆதிபத்தியம், எங்கெங்கு பரவியிருந்ததோ அங்கெல்லாம் சரிந்து விட்டது. இந்தியா, பர்மா, இலங்கை முதலான இடங்கள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பிடியிலிருந்து நழுவிவிட்டன. எனவே, முன்போலத் தன் பொருள்களை அங்கெல்லாம் கொண்டுபோய்க் குவித்து, தனக்குத் தேவையான மூலப் பொருள்களையும், உணவுப் பொருள்களையும், கொண்டுவருவதென்பது சாத்தியமற்றதாகி விட்டது. இங்கிலையில் போரால் பாதிக்கப்படாத அமெரிக்காவோ, தன் ஆதிபத்தியத்தை அதிகரித்துக்கொண்டு வல்லரசுகளுள் முதலிடம் பெற்றுக் கொண்டு விட்டதால், அதன் பொருள்களுக்கு எங்கும் மார்க்கெட் ஏற்பட்டு விட்டது—வளர்ந்துவர ஆரம்பித்தது!

பிரிட்டனோ, மூலப்பொருள்களுக்குப் பிறநாடுகளை எதிர்பார்க்க வேண்டியதாகும். மூலப்பொருள்களை வாங்கவேண்டுமென்றால், தனது உற்பத்திப் பொருள்களை விற்க வேண்டும். விற்கமுடிகிறதா, இடம் இருக்கிறதா, என்றால் இல்லை!

எனவேதான் தன்னுடைய நாணயமான ஸ்டர்லிங்கின் மதிப்பைக் குறைத்துக்கொண்டிருக்கிறது. அமெரிக்க நாணயமான டாலருக்கும், ஸ்டர்லிங்குக்கும் இருந்த நாணய மாற்றுவிகிதம் முன்பு ஒரு ஸ்டர்லிங்குக்கு 4 டாலர் 3-செண்ட் என்பது, இப்போது 2 டாலர் 80 செண்ட் என்று குறைக்கப்பட்டிருக்கிறது.

இப்படி ஸ்டர்லிங்கின் மதிப்புக் குறைக்கப்பட்டதால், இங்கிலாந்தினுடைய பொருள்கள், அமெரிக்காவிலும், ஏனைய காமன்வெல்த் நாடுகளிலும் விற்பனையாக வழி பிறந்திருக்கிறது.

பிரிட்டனில் செய்யப்பட்ட ஒரு பேனாவின் விலை ஒரு ஸ்டர்லிங், என அமெரிக்காவில் முன்பு விற்பனை செய்யப்பட்டால், அதை வாங்க விரும்பும் அமெரிக்கர் அதற்கு விலையாக, ஒரு ஸ்டர்லிங்குக்குச் சமமாக 4 டாலர் 3 செண்ட் கொடுக்கவேண்டும்.

ஆனால் புது விகிதப்படி அந்தப் பேனாவின் விலை ஒரு ஸ்டர்லிங்தான் என்றாலும், அதற்குச் சமமாக 2 டாலர், 80 செண்ட் கொடுத்தால் போதும்!

பிரிட்டிஷ் சாமான் விலை குறையவில்லை! ஆனால் வாங்கும் அமெரிக்கருக்கோ விலை குறைந்திருக்கிறது!! எனவே, சரசமாகக் கிடைக்கும் பிரிட்டிஷ் சாமானை வாங்க, அவர்களுக்கு ஆர்வம் உண்டாகும். அதன் விளைவாக பிரிட்டனில் குவிந்து கிடக்கும் பொருள்கள், ஏற்றுமதியாகித் தனக்கு வேண்டிய டாலரைச் சம்பாதித்து, மூலப் பொருள்களை, முடக்கமின்றிப் பெற்றுக் கொள்ளலாம்!

பிரிட்டனின் நாணய மதிப்புக் குறைவு நடவடிக்கையை யொட்டித் தங்கள் நாடுகளின் நாணயங்களுக்கும், டாலருக்கும் உள்ள செலாவணி மதிப்பைக் குறைத்து ஸ்டர்லிங்குக்குச் சமமாக ஆக்கிக் கொண்டிருக்கும் நாடுகள்,

| | |
|---|---|
| இந்தியா | கானடா |
| ஆஸ்திரேலியா | தென் ஆப்பிரிக்கா |
| அயர்லாந்து | இலங்கை |
| நியுஜிலாந்து | எகிப்து |
| இஸ்ரேல் | ஐஸ்லாந்து |
| நார்வே | ஸ்வீடன் |
| டென்மார்க் | பிரான்ஸ் |

ஆகியவைகளாகும். இவைகளின் நாணயங்களுக்கும் டாலருக்கும் இருந்த செலாவணி மாற்றத்தில், மதிப்புக் குறைக்கப்பட்டிருக்கிறதே ஒழிய, பிரிட்டிஷ் நாணயமான ஸ்டர்லிங்குக்கும், இவைகளுக்கும் உள்ள மதிப்பு குறைக்கப்படாது, அப்படியே, எப்போதும் போலவே இருக்கின்றன.

முன்பு, பிரிட்டன் சாமான் ஒன்று இந்தியாவில் 18 பென்ஸ் விலை என்றால் நாம் ரூ1 கொடுத்தால்போதும். அது போலவே இப்போதும் நாம் அந்தச்சாமானுக்கு அதே விலைதான்——ரூபாய் ஒன்றுதான் — கொடுக்க வேண்டும். ஆனால், அமெரிக்காவிலிருந்து வந்து இங்கு விற்கும் ஒரு சாமானின் விலை ஒரு டாலர் என்றால் முன்பு, நாம் ரூ 3—5—4 கொடுத்தால் போதும். ஆனால் இப்போதோ, நாம், ரூ 4—12—0 கொடுக்கவேண்டும் புது, நாணய மதிப்புப்படி.

வழக்கம்போல கடைக்குச்சென்று அமெரிக்கப் பேனா ஒன்றை ரூ 3—8—0க்கு வாங்கிவரும் கந்தப்பன், இப்போது போய் அதே பேனாவைக் கேட்டால் விலை ரூ 5-க்குச் சமமாக இருக்கும்! ஆனால், அப்போது ரூ 3—8—0-க்கு விற்ற பிரிட்டிஷ் பேனா இப்போதும் அதே ரூ $3\frac{1}{2}$-க்குக் கிடைக்கும். எனவே கந்தப்பன் குறைந்த விலையில் கிடைக்கும் பேனாவே போதுமென வாங்கிச் செல்வான்.

ஆகவே, நாணய மதிப்பைக் குறைத்துக்கொண்ட நாடுகளிலும் இனி இங்கிலாந்தின் பொருள்கள் விற்பனையாகும் இலகுவாக.

ஸ்டர்லிங் நாணய மதிப்பைக் குறைத்துக்கொண்டதால் பிரிட்டனுக்கு ஏற்படும் பலன் — நன்மை இது.

* * *

பிரிட்டன் தனது ஸ்டர்லிங் மதிப்பைக் குறைத்துக்கொண்டதை யொட்டி காமன்வெல்த் நாடுகளில் ஒன்றான இந்தியாவும் தனது ரூபாய்க்கும் டாலருக்குமிருந்த நாணயச் செலாவணி முறையைக் குறைத்துக் கொண்டது. இதன்படி முன்பு ஒரு ரூபாய்க்கு 30 செண்டுகள் என்றால் இப்போது 21 செண்டுகள்தான். (100 செண்டுகள் கொண்டது 1 டாலர்)

"இப்படி நாணய மதிப்பை இந்தியா குறைத்துக் கொண்டது நல்லதா, நாம் புது தொழிற்சாலைகளை நிறுவ வேண்டியவர்களாக இருக்கிறோமே, அந்தத் தொழிற்சாலைகளில் நிர்மாணிக்க இயந்திரங்களை நாம் அமெரிக்காவிலிருந்து தானே வரவழைக்கவேண்டும், அவைதானே நல்லவையாக இருக்கின்றன, அதற்கு நாம் புது மாறுதல்படி கொடுக்கவேண்டிய தொகை அதிகமாயிற்றே"

"புது இயந்திரங்களை வாங்க முடியாமல் நாம் திண்டாட நேரிட்டால், அமெரிக்க முதலாளிகள் ஆசை காட்டி, 'நீங்கள் பணம் தரவேண்டாம். எங்கள் இயந்திரங்கள் மட்டும் இருக்க அனுமதியுங்கள்' என்று, தொழிற்சாலைகளை நிர்மாணிக்கத் தொடங்கி இந்தியாவைச் சுரண்ட ஆரம்பித்துவிடுவார்கள்!"

'இந்தியா எங்கே சார்? அமெரிக்காவிடம் அடிமைபடத்தான் போகிறது? இயந்திரங்களை வாங்க சர்வதேச பாங்கிடமும், மார்ஷல் திட்டப்படியும் கடன் வாங்கத்தானே, சார், வேண்டும்! இதன் விளைவு வேதனைதானே, சார்?'

இதுபோன்ற அபிப்பிராயங்கள் உலவுவே செய்கின்றன. இவைகளில் அர்த்தமில்லாமலும் இல்லை. இந்தியா ஏற்கனவே, சர்வதேச பாங்கிடமும், சர்வதேச நாணயச் செலாவாணி பாங்கிடமும் கடன் வாங்கியிருக்கிறது டாலர் கணக்கில். எனவே, முன்பு வாங்கியடாலருக்கு இப்போதைய திட்டப்படி, எதிர்காலத்தில் கடனை அடைக்கும் பொழுது, அதிகமான தொகை (இந்திய ரூபாய்கள்) கொடுக்கும்படிதான் நேரிடும்.

"ரூபாய் மதிப்பீடு குறைவுபற்றியும் அதன் விளைவுகள் எவ்வளவு நன்மைபயக்கும் என்பது பற்றியும் இப்போது அறுதியிட்டுச் சொல்வது கஷ்ட சாத்தியமானது—சிக்கல் நிரம்பியது" என்று பண்டித நேரு, இந்தியப் பிரதமர், இந்தியாவின் நடவடிக்கைபற்றி நிருபரிடம் கூறினாராம். அவருக்கே, தன் சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை பற்றி அவ்வளவு 'தெளிவும்' 'நம்பிக்கையும்' இருக்கும் போது, இந்தியாவின் நடவடிக்கை கேடுபயக்கும் என்பது குறித்த பலரக அபிப்பிராயங்கள் எழும்பாமலா இருக்கும்!

* * *

இந்தியாவிலிருந்து, டாலர் நாடான அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருளையும், அங்கிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருளையும், கவனித்தால் அது இன்னும் பீதியூட்டுவதாகவே இருக்கிறது. 1948-ல் இந்தியாவிலிருந்து, அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களிலிருந்து கிடைத்த தொகை 27-கோடி டாலர்கள். அப்படி இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முக்கிய பொருள்களாவன:—

மைகா, மாங்னீஸ், சணல் பைகள், மிளகு, எண்ணெய்வித்துக்கள், முந்திரி, தேயிலை,

முதலிய மூலப்பொருள்கள்தான்! ஏற்றுமதி செய்யப்பட்ட இந்தப் பொருள்களிலிருந்து இந்தியாவுக்குக் கிடைத்த தொகை 27-கோடி டாலர்கள்! ஆனால், அமெரிக்காவிலிருந்து இந்தியா வாங்கிய பொருள்களின் விலை என்ன தெரியுமா!

30 கோடி டாலர்கள்! ஏற்றுமதியில் வந்த 'வரவை'விட மூன்று கோடி டாலர்கள் அதிகம். எனவே, மதிப்புக்குறையாமலிருந்த பொழுதே இந்த நிலை, இந்தியாவுக்கு என்றால், இனி இன்னும் அதிகமான தொகைதானே கொடுக்கவேண்டியிருக்கும்!

அமெரிக்காவிலிருந்து நாம் இயந்திரங்கள் முதலானவைகளை வாங்குவதற்குப் பதில், ஸ்டர்லிங் நாடுகளிலிருந்து நாம் வாங்கிக்கொள்ளலாம், அப்போது அதிகமாகாதல்லவா, என்றும் கூறப்படுகிறது. அது

(14-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street, Kancheepuram.